Registered No. M-1.

# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## II-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

## SUPPLEMENT TO PART II OF THE FORT ST. GEORGE GAZETTE

FEBRUARY 8, 1938.

நெ. 6.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 8 உ. [PRICE. 2 a. 6 p.

### போர்ட் ஆப் ரெவினியு ஸெபரேட் ரெவினியு.

---

### விளம்பரம்.

நெ. 2, 1938-ம் வருஷம் ஜனவரி மாதம் 22 உ.

### அப்காரி, அபினி, சுதந்திரங்களை விற்பனை பண்ணுவதைப்பற்றிய நோட்டீஸ்.

இதனால் தெரிவிப்பது என்னவென்றால்: 1938-ம் வருஷம் எப்ரல் மாதம் 1 உ முதல் 1939-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31 உ வரையிலுள்ள பன்னிரண்டு மாத காலத்திற்கு மதுவையும் அபினி கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களையும் விற்பனை பண்ணுவதற்காக ஏற்படுத்திய சுயாதீனக் கடைகள் இத்தனை என்பதையும் அவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பிரதேச எல்லைகளையும் கலெக்டர்கள் தங்கள் தங்களுடைய டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டுகளில் பிரசுரம் செய்வார்கள். மேலும் அந்தப் பிரதேசங்களில் விற்பனை பண்ணும் சுதந்தரமானது எந்தத் தேதியில் எந்த இடத்திலே எந்த உத்தியோகஸ்தர்களால் ஏலம் போடப்படுமென்று மேற்படி கலெக்டர்களால் தெரிவிக்கப்படுகிறதோ அந்தப்படி அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பகிரங்கமாய் ஏலம் போடப்படும். மதராஸ் டவுனிலுள்ள சாராயக்கடைகளும் அன்னிய மது டாவரன்களும் "ஆக்ஷன்-கம்-டெண்டர்" ஏற்பாட்டின்படி விடப்படும். இவ்விதமான ஏற்பாட்டிற்குறிய ஸ்பெஷல் நிபந்தனைகளை மதராஸ் கலெக்டரவர்கள் பிரத்தியேகமாக பிரசுரம் செய்வார், ஆனால் மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை பண்ணுவதற்கான எந்த சுதந்திரத்தையும் கலெக்டரவர்கள் அவர்கள் யுக்தப்படி வினியோகிக்கலாம். மங்களூர் டவுன் சாராயக் கடைகளில் சாராயம் மங்களூர் வேர்ஹௌஸிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஸீல் வைக்கப்பட்ட ஸீசாக்களிலும் விற்கப்படவேண்டியது. மங்களூர் டவுனிலும் மங்களூர் தாலூகாவிலும், உடுப்பி கேஸரகாட் சர்கிள்களிலும் உள்ள சாராயக்கடைகளில் பாகு சாராயமல்லாமல், மங்களூர் வேர்ஹௌஸிலிருந்து அல்லது மங்களூர் வேர்ஹௌஸிலிருந்து சப்ளை செய்யப்படும் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும். முந்திரிச் சாராயமும் விற்கப்படவேண்டியது. இவ்விதமான விக்கிரயங்களுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகளை தென் கன்னடம் ஜில்லா கலெக்டரவர்கள் பிரத்தியேகமாய் பிரசுரம் செய்வார். விசாகப்பட்டணம் ஜில்லா, சிகாகோல் சர்கிளில் ஏற்படுத்தப்பட்ட டிபோக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் 60 டிக்ரி குறைந்த காரமுள்ள இப்பா சாராயம் அந்த சர்க்கிளில் பாகு சாராய விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட கடைகளிலும், இப்பாசாராயம் மாத்திரம் விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல் கடைகளிலும் விற்கப்படவேண்டியது. இவ்விதமான விக்ரயங்களுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகளை விசாகப்பட்டணம் ஜில்லா கலெக்டரவர்கள் பிரத்தியேகமாய்ப் பிரசுரம் செய்வார்.

சுயாதீனமான சாராயக் கடைகளும், அன்னிய மதுக் கடைகளும், பீர் கடைகளும், கஞ்சாக் கடைகளும், அபினிக் கடைகளும், முறையே இன்னின்ன டிஸ்ட்ரிக்டுகளில் விற்கப்படுமென்று அடியிற் குறிக்கப்பட்டிருக்கின்றன :—

1938-ம் வருஷம் எப்ரல் மாதம் 1 உ முதல்

சாராயம், கஞ்சா, அபினி கடைகள்.

சேலம் ஜில்லாவைத்தவிர இதர ஜில்லாக்களில்.

அன்னிய மதுக்கடைகள்.

விசாகப்பட்டணம், கீழ் கோதாவரி, கிருஷ்ணா, பல்லாரி, சென்னப்பட்டணம், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, மலையாளம் ஜில்லாக்களில்.

பீர் கடைகள்.

பல்லாரி, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமனாதபுரம், கோயம்புத்தூர், நீலகிரி, தென் கன்னடம், மலையாளம் ஜில்லாக்களில்.

கரார் கட்டணத்தின்பேரிலாவது அல்லது விற்பனைக்குத்தக்க கட்டணத்தின்பேரிலாவது கொடுக்கப்படும் சீமைச் சாராய விற்பனை லைசென்ஸுகளைப்பற்றி பிரத்தியேகமான நோட்டிபிகேஷனில் சொல்லப்படும்.

**ஏல விற்பனையின் நிபந்தனைகள்.**

I. விலை கேட்கிறவன் ஒவ்வொருவனும் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரிடம் ஏல தினத்தில் ரூ. 20 டேவணி கட்டவேண்டியது ; இந்த டிபாஸிட்டை

விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் தமக்கு அவசியமாக தோன்றினால் ரூ. 10 ஆக அல்லது ரூ. 5 ஆகக் குறைக்கலாம் ; சென்னை நகரில் விலை கேட்கிற ஒவ்வொருவனும் கட்ட வேண்டிய டிபாஸிட்டு தொகை ரூ. 50. இந்த டிபாஸிட்டு கட்டினாலொழிய எவனும் ஏல அறைக்குள் விடப்படமாட்டான். எவனும் மற்றொருவனுக்காக அவனிடத்தில் பவர் ஆப் அட்டர்னி என்னும் முக்தியார்நாமா பெற்றிருந்தாலொழிய விலை கேட்கக்கூடாது. யாதொரு கடையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு ஊர்ஜிதம் செய்யப்படமாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி விஷயங்களில் மேற்படி கம்பெனியாரால் கொடுக்கப்பட்ட பவர் ஆப் அட்டர்னி என்னும் முக்தியார்நாமா பெற்ற ஏஜெண்டாகிலும் அல்லது கம்பெனியின் விதிகளின்படி அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தராகிலும், மேற்படி கம்பெனியின் முகாந்திரமாக கடைகளை ஏலம் எடுத்து நடவடிக்கைகளை நடத்தலாம். பிரதிதினம், ஏலம் முடிந்தவுடன் விலை கேட்டு குத்தகை கிடைக்கப் பெறாதவர்கள் மேலே சொல்லியபடி கட்டிய டேவணி தொகைகளை கேட்டு வாப்பீஸ் வாங்கிக்கொள்ளலாம்.

குறிப்பு.—சென்னை நகரில் டிபாஸிட்டு தொகை தாலூகா கஜானாவில் கட்டப்பட்டு கஜானா ரசீது விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரிடம் காண்பிக்கப்படவேண்டியது. பிரதிதினம் ஏலம் முடிந்தவுடன் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரின் உத்தரவின் பேரில் விலைகேட்டுக் குத்தகை கிடைக்கப் பெறாதவர்களின் டிபாஸிட்டுத் துகைகள் அந்தந்த ரசீதுகளை தாலூகா கச்சேரியில் தாக்கல் செய்ததன் பேரில் வாப்ஸ் செய்யப்படும்.

**II**. ஏலம் நடத்துகிற அதிகாரி தமக்கு யுக்தமானால் அடியிற்கண்ட காரணத்திற்காக ஒருவன் கேட்ட ஏலத் தொகையை அங்கீகாரம் செய்வதை மறுதளிக்கலாம் :—

(1) யாதொரு கிரிமினல் கோர்ட்டினால் தண்டிக்கப்பட்டவன் அல்லது அப்காரி, அபினி ஆக்டின் உடன்படிக்கையாவது யாதொரு லைசென்ஸின் நிபந்தனைகளையாவது மீறி நடந்த குற்றத்தை முன்னமே செய்தவன் என்கிற காரணத்தினால் லைசென்ஸு பெறுவதற்கு யோக்கியதை யில்லாதவன் என்கிற காரணத்தினலாவது ; அல்லது

(2) கடன் தீர்க்க நிர்வாகமில்லாதவன் அல்லது சர்க்காருக்கு பாக்கிதாரன் என்கிற காரணத்தினலாவது ;

(3) யாதொருவன் கேட்ட ஏலத்தொகையானது நிராதாரமென்று தோன்றும் பக்ஷத்தினலாவது ;

(4) யாதொரு ஏலம் கேட்கிறவன், கடையிருக்கும், கடையினால் சப்ளை செய்யப்படும், அல்லது கடைக்கு அடுத்த, கிராமத்தினுடைய கிராம நவுகராகவாவது அல்லது அவன் பந்துவாயாவது இருக்கும் பக்ஷத்தில் ;

(5) யாதொருவன் கடையிருக்கும் காண்ட்ராக்ட் பிரதேசத்தில் நாட்டுச் சாராயங்களை காண்ட்ராக்டாய் சப்ளை செய்கிறவன் என்னும் காரணத்தினலாவது ;

(5) யாதொரு (சுதேச அல்லது அன்னிய தேச) பீரை உற்பத்தி செய்கிறவனாவது அவனுடைய ஏஜெண்டாவது, அவ்விடத்திலேயே குடிப்பதற்கு பீர் விற்பனை செய்யும் கடைகளுக்கு ஏலம் கேட்கிறானென்கிற காரணத்தினலேயாவது ;

(7) கவர்ன்மெண்டுக்கு பிரதிகூலமான ஏற்பாடுகளை தடுக்கும் பொருட்டாவது ; அல்லது

(8) வேறெந்த உறுதியான காரணத்திற்காவது.

**III**. பிரதி கடைகளுக்கும் நியமிக்கப்பட்ட உத்தேச விலை பிரசுரப்படுத்தப்படமாட்டாது. ஆனால் முந்திய 5 வருஷங்களின் சராசரி மாதக் குத்தகைத் தொகை ஏலமெடுப்பவர்களுக்கு தெரியும்பொருட்டு கலெக்டரவர்களால் சாத்தியமான வரையில் பிரசுரம் செய்யப்படும். விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரின் இஷ்டப்படி பிரதி கடைக்கும் ஏலம் கேட்க ஆரம்பிக்கவேண்டிய விலை நிர்ணயிக்கப்படும்.

**IV**. விற்பனை செய்யும் உத்தியோகஸ்தருக்கு கிரமத்தை மாற்ற முகாந்திரம் காணப்பட்டாலொழிய ஷாப்புகள் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கிரமத்தில் ஏலம் போடப்படும்.

**V**. கலெக்டரவர்களால் பிற்பாடு ஊர்ஜ்ஜிதம் செய்வதற்குட்பட்டு, கேட்கப்பட்ட விலைகளுக்குள் உயர்ந்த விலையானது விற்பனை உத்தியோகஸ்தரால் அப்போதுக்கு அங்கீகரிக்கப்படும். கலெக்டரே விற்பனை செய்யும் உத்தியோகஸ்தராயிருந்தபோதிலும் விற்பனை முடிவில் கலெக்டர் பிற்பாடு ஊர்ஜிதம் செய்வது அவசியமாகும். கலெக்டருக்கு தம் யுக்தப்படிக்கு எந்த ஏலத்தொகையும் ஒப்புக் கொள்ளுகிறதற்கும் ரத்து செய்கிறதற்கும் அதிகாரமுண்டு. ஏலம் முடிவதற்குள் II-வது பிரிவில் கண்டபடி எந்தக் கடையினுடைய ஏலத்தொகையையாவது விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் தள்ளிவிட்டால் அவர் தம் யுக்தப்படி அதற்கடுத்த ஏலத்தொகையை ஒப்புக்கொள்ளலாம், அல்லது கடையை மறு ஏலம் செய்யலாம் ; விவாதம் நேரிட்டால் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரின் தீர்மானம் முடிவானதாகும்.

**VI**. (a) ஏலத்தின் எவனுடைய விலை அப்போதைக்கு அங்கீகரிக்கப்படுகிறதோ அந்த ஒவ்வொருவனும்

(i) விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் உத்திரவு செய்யும் பக்ஷத்தில் உடனேயும் இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்திலும், முதலில் கட்டிய டேவணி இரண்டு மாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய, ஒவ்வொரு கடைக்கு (1-வது பிரிவில் கண்டபடி கட்டிய டிபாசிட்டைத் தவிர) பாதி மாதத்தியக் குத்தகைத் தொகை டேவணியாய் கட்டவேண்டியது; மேலும்,

(ii) அவனுடைய விலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒவ்வொரு கடைக்கும் லைஸென்ஸு கொடுப்பதற்கு உடனே மனு செய்துக்கொள்ளவேண்டியது. ஒரு வாரத்துக்குள், கடையை ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிற ஜாகாவின் எல்லைகளையும், அவனுடைய ஸ்தாவர சொத்துக்களின் விவரத்தைக் காண்பிக்கும் (இந்த நோடிபிகேஷனுக்கு சேர்க்கப்பட்டிருக்கிற) குறிப்பிட்ட பாரத்தில் ஒரு நமூனாவையும் அனுப்பவேண்டியது. ஷை நமூனாவில் அவனுக்கு சொந்தமாவது அல்லது எவ்வித பாத்தியமாவது உள்ள ஸ்தாவர சொத்துக்களும் அவைகளின் மேலுள்ள வில்லங்கங்கள் முதலியவைகளுடைய விபரங்களையும் சரியாயும் பூராவாயும் குறித்திருக்கவேண்டும்.

(iii) விற்பனை தினத்திலிருந்து பதினைந்து தினங்களுக்குள் மேல் கண்ட (i) பிரிவில் கண்டபடி ஏற்கனவே கட்டிய டிபாஸிட்டுகள் போக எவ்வளவு தொகை செலுத்தினால் ஏலமெடுத்த கடைகள் யாவத்துக்கும் இரண்டு மாதத்திய குத்தகைத் தொகையாகுமோ அவ்வளவு தொகையை டேவணியாகக் கட்டவேண்டியது.

(b) மேலும், விக்கிரயம் பெற்றவன் கிஸ்திகளை பூராவும் தவராமல் கட்டத் தகுந்தவனென்று தாசில்தாருக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் மேலே சொல்லிய (a) (iii) பிரிவில் கண்ட டேவணித் தொகையை கட்டுவதோடுகூட கீழே குறிக்கப்பட்டுள்ள மூன்று மார்க்கங்களில் ஏதாவது ஒன்றை விக்கிரயம் பெற்றவன் நிர்ணயித்து அதன் பிரகாரம் தாசில்தார் குறித்த காலத்திற்குள் நடக்கும்படி தாசில்தார் உத்திரவு செய்யவேண்டும் ; அவையாவன—

(i) ஏலமெடுத்த கடைகள் யாவத்துக்கும் இரண்டு மாதத்திய குத்தகை தொகையை டேவணி கட்ட வேண்டியது ; அல்லது

(ii) காண்ட்ராக்டின் ஷரத்துகளின்படி அவனால் சேரவேண்டிய எல்லாத் தொகைகளையும் செலுத்தத் தவறினால், அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்பவருக்கு உட்படுத்தி அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை கவர்ன்மெண்டுக்கு ஷை தொகை முழுவதிற்கும் அடமானமாக வைத்து ஒரு அடமான பத்திரம் எழுதிக்கொடுப்பது ; அல்லது

(iii) தாசில்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தாரர்களைக் கொண்டு

ஷை கடைகளின் காண்ராக்ட் ஷரத்துகளின்படி அவனால் சேரவேண்டிய எல்லாத் தொகைகளையும் கிரமப்படி செலுத்தவேண்டிய நிமித்தமாய் ஒரு ஜாமீன் பத்திரமும் விக்கிரயம் பெற்றவன் ஷை காண்ராக்டின்படி செலுத்தவேண்டிய எல்லாத் தொகைகளுக்கும் ஷை ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தாரர்களுடைய ஸ்தாவர சொத்துகளைக் கவர்ன்மெண்டுக்கு அடமானமாக வைத்து ஒரு அடமானப் பத்திரமும் எழுதிக் கொடுக்கும்படி செய்விக்க வேண்டியது. ஷை அடமானபத்திரத்தில், ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தார்களாவது விக்கிரயம் பெற்றவனாவது மேல் சொல்லிய தொகைகளை கொடுக்கத் தவறினால் ஷை சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்பவருக்கு உட்படுத்தி எழுதப்படவேண்டியது.

மேலே சொல்லப்பட்ட (ii) - வது பிரிவின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட ஸ்தாவர சொத்துக்களின் கிரயம் போதுமானதென்று தாசில்தாருக்கு நம்பிக்கை எற்படாவிட்டால், விக்கிரயம் பெற்றவனுடைய ஸ்தாவர சொத்தை அடமானம் வைப்பதோடுகூட, செலுத்தவேண்டிய பாக்கி தொகைக்கு, தாசில்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தாரர்களை கொண்டு ஒரு ஜாமீன் பத்திரமும், அந்த ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்கள் ஸ்தாவர சொத்தை கவர்ன்மெண்டுக்கு அடமானம் வைத்து அடமான பத்திரமும் எழுதிக் கொடுக்கும்படி தாசில்தார் உத்திரவளிக்கவேண்டும்.

இந்த (b) பிரிவில் கண்ட ஜாமீன்தாரர்கள் ஸ்தாவர சொத்துக்களின் விபரத்தைக் காண்பிக்கும் (இந்த நோடிபிகேஷனுக்கு சேர்க்கப்பட்டிருக்கிற) குறிப்பிட்ட பாரத்தில் ஒரு நமூனாவை தாசில்தாருக்கு அனுப்பவேண்டும்.

இந்த (b) பிரிவில் கண்ட நிபந்தனைகளை விக்கிரயம் பெற்றவன் தாசில்தார் அவ்வாறு செய்யவேண்டுமென்று கட்டளையிட்ட உத்திரவு வந்த 10 தினங்களுக்குள் நிறைவேற்ற கடமைபட்டவனாவான்.

மேல் சொல்லிய ஜாமீன் பத்திரத்தையும், அடமான பத்திரங்களையும் ஸ்டாம்பு ஒட்டி விக்கிரயம் பெற்றவனுடைய செலவில் ரிஜிஸ்டர் செய்விக்கப்படும். விக்கிரயம் பெற்றவன் முச்சலிக்கா உடன்படிக்கை செய்ய பிணைக்கப்படுவான். கிரயம் பெற்றவனாவது ஜாமீன்தாரனாவது ஸ்தாவர சொத்துக்களை கவர்ன்மெண்டுக்கு அடமானமாக வைக்கும் விஷயங்களில் அந்த சொத்துகளின் பேரிலுள்ள வில்லங்கங்களைப் பற்றி ஒரு செர்ட்டிபிகேட் அவனுடைய சொந்த சிலவில் வாங்கி தாக்கல் செய்யவேண்டியது.

**VII.** அங்கீகரிக்கப்பட்ட எலத்தொகையானது கலெக்டரால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படாத விஷயத்தில் டேவணித் தொகைகள் திரும்பக் கொடுத்துவிடப்படும்.

**VIII.** விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் விற்பனை தினத்தின் அந்தியத்தில் மறுயேலம் தேவையாக தோன்றும் பக்ஷத்தில் இன்ன தேதியில் மறு எலம் போடப்படுமென்று பிரசுரம் செய்வார்; மறுயேலம் போடவேண்டிய கடைகளின் ஜாப்தா தயாரானவுடன் அந்த ஜாப்தாவின் நகல்கள், தாசில்தாரிடம் பெயர் விலாசம் தெரிவிக்கிற எலதார்களுக்கு அனுப்பப்படும்.

**IX.** அங்கீகரிக்கப்பட்ட எலத் தொகைகளை ஊர்ஜ்ஜிதம் செய்கிற அல்லது தள்ளிவிடுகிற விஷயத்தில் கலெக்டருடைய உத்திரவானது, தகுந்த காரணங்களுக்காக ரெவினியு போர்டாரால் மாற்றப்பட்டாலொழிய, முடிவானதாகும். முதல் எலத்தில் கேட்கப்பட்ட எந்த விலையாவது போதுமானதல்ல வென்கிற காரணத்தினால் கலெக்டரால் ஊர்ஜிதம் செய்யப்படாமல் மறுயேலம் ஏற்பட்டால் முதல் எலத்தில் விற்பனை உத்தியோகஸ்தரால் அப்போது அங்கீகரிக்கப்பட்ட விலையிலிருந்தும் அந்த விலை கேட்டவன்பேரிலிருந்தும் மறுயேலம் ஆரம்பிக்கப்படும்.

**X.** விக்கிரயம் பெற்றவன் மேலே VI-வது பிரிவின்படி டேவணி செலுத்தத் தவறினாலும், லைசென்ஸுக்கு மனு செய்துகொள்ளத்தவறினாலும், அந்த பிரிவின்படி போடப்பட்ட உத்திரவின்படி நடந்து கொள்ளாவிட்டாலும் அல்லது முச்சலிக்கை எழுதிக்கொடுக்கத் தவறினாலும், அந்தத் கடை டிவிஷனல் ஆபீசரின் உத்திரவின் பேரில் மறுயேலம் போடப்படும் அல்லது டிவிஷனல் ஆபீசரின் ரிபோர்ட்டின் பேரில் கலெக்டரால் வேறு விதமாய் வினியோகிக்கப்படும். இந்த பிரிவின்படி மறு எலம் போடுவதில் நஷ்டம் நேரிட்டால் அதற்காகமேற்சொல்லியபடி தவறிப்போனவன் உள்ளாக வேண்டியது; லாபம் நேரிட்டால் அது ஒன்றும் அவனுக்குச் சேரமாட்டாது; நஷ்டம் உண்டாகும்போது அவன் முதல் எல விற்பனை ஷரத்தின்படி தவணை முழுமைக்கும் செலுத்தவேண்டிய பூராத் தொகைக்கும், மறு எல விற்பனையில் கிரயத்துக்குக் கொண்டவனால் செலுத்தப்படத்தக்க பூராத் தொகைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அதைக் கட்டிக் கொடுக்கவேண்டியது. அப்படி மறு எலத்தில் நஷ்டம் நேரிடுகிற விஷயத்திலே தவறிப்போனவன் எற்கனவே கட்டியிருக்கும் டேவணித் தொகையை சர்க்கார் தாக்கல் செய்யப்பட்டு மறு எல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மீதி நஷ்டம் எதாவதிருந்தால் அது லாண்டு ரெவினியு பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே மேற்சொல்லியபடி தவறினவனிடத்திலிருந்து வசூல் செய்யப்படும். அந்த டேவணித் தொகைகள் மறு எல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத் தொகைக்கு அதிகப்பட்டிருந்தால் மறு எலத்தினாலுண்டாகும் நஷ்டத்திற்கு உளவடைக்க எவ்வளவு டேவணித் தொகைகள் தேவையாயிருக்குமோ அவ்வளவு பாகத்தை சர்க்கார் தாக்கல் செய்து பாக்கியை அவனுக்கு வாபீஸ் செய்துவிடப்படும். மறு எலம் போடுவதன்றி வேறு விதமாய் கடை வினியோகிக்கப்பட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்திற்கும் மேற்கூறியபடி தவறிப்போனவன் உள்ளாக வேண்டியது. மறு எலமின்றி வேறுவிதமாய் வினியோகமென்பது கடையை மூடுவதும் உள்பட்டதாகும்.

**XI.** அப்காரி அல்லது அபினி சுதந்தரத்தை விக்கிரயம் பெற்றவன் கிரமப்படி ஷை லைஸென்ஸைப் பெருமலிருந்தாலுங்கூட அடியிற் கண்ட ஷரத்துகளை மீறி நடப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் சிக்ஷைகளுக்குள்ளாவான். லைஸென்ஸ் பெற்ற பிற்பாடு கொள்வோர்கட்கு மரணம் சம்பவித்தால் அவர்களுடைய வார்சுதாரர்களும் காரியகர்த்தர்களும் லைஸென்ஸின் ஷரத்தின் பிரகாரம் கவர்ன்மெண்டுக்கு சேரவேண்டிய எல்லாத் தொகைக்கும் பிணைக்கப்படுவார்கள். மேலும், லைஸென்ஸின் எல்லா ஷரத்துகளின் பிரகாரமும் சரியாய் நடப்பதற்கு உடன்படுவார்கள்.

**XII.** மேலே சொல்லிய VI (a) (ii), (b) (i)-வது பிரிவில் கண்ட டிபாஸிட்டுகளை ரொக்கமாயாவது அல்லது ஒப்புக்கொண்ட கவர்ன்மெண்ட், போர்ட்டு ட்ரஸ்ட், முனிஸிபல் அல்லது லோகல் போர்ட் ஸெக்யூரிடி பத்திரமாயாவது, போஸ்டல் சேவிங்ஸ் பாங்க் புஸ்தகங்களாவது, அல்லது மாகாண கோ - ஆப்ரேடிவ் பாங்க் (மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்க்) லிருந்தாவது அல்லது கோ-ஆபரேடிவ் ஸொஸைடி ரிஜிஸ்ட்ரார் அவர்களால் அங்கிகரிக்கப்பட்ட எந்த செண்டரல் பாங்கிலிருந்தாவது அடையப்பட்ட டிபாஸிட்டு சர்டிபிகேட்டாகவாவது கட்டலாம்: ரொக்கமின்றி வேறு விதமாய் டிபாஸிட்டுகள் கட்டினால் ரொக்க டிபாஸிட்டைக் காட்டிலும் இவ்வளவு அதிகமான தொகைக்கு மேல்கண்ட ஒவ்வொரு பத்திரமும் இருக்கவேணுமென்று காலக்கிரயத்தைத் உத்தேசித்து கலெக்டரவர்கள் உத்திரவு செய்யலாம். இந்தப் பிரிவின்படி கட்டப்பட்ட டிபாஸிட்டுகள் I-வது, VI (*a*) (i)-வது பிரிவுகளின்படி கட்டப்பட்டு திரும்பிக் கொடுக்கப்படாமலிருக்கிற ரொக்க டிபாசிட்டுகளுக்கும் VI (a) (iii), (b) (i)-வது பிரிவின்படி கட்டவேண்டிய டிபாசிட்டுக்கும், போதுமானதென்று

கலெக்டர் உத்திரவு செய்தால் ஏற்கனவே கட்டிய ரொக்க டிபாசிட்டுகள் டிபாசிட்டர்களுக்கு திரும்பிக் கொடுத்து விடப்படலாம். VI (a) (iii), (b) (i) ஷரத்தின்படி, மேல் சொல்லிய ஸெண்டரல் பாங்கிகளில் எதாவதிலிருந்து அடையப்பட்ட டிபாஸிட் சர்டிபிகேட்டுகளாவது அல்லது ரொக்கமாவது டிபாஸிட்டு செய்திருக்கிற குத்தகைதாரர்கள், I, VI (a) (i) அல்லது I, VI (a) (i), (iii), (b) (i) ஷரத்துகள் பிரகாரம் கட்டிய ரொக்க டிபாஸிட்டு தொகையை ஸெண்டரல் பாங்கில் தாசில்தார் பேருக்கு பிக்ஸட் டிபாஸிட்டாக மாற்றும்படி டிரஷரி அல்லது சப்-டிரஷரி உத்தியோகஸ்தருக்கு மனுக் கொடுத்துக் கொள்ளலாம்; டிரஷரி அல்லது சப்- டிரஷரி உத்தியோகஸ்தர் அந்த மனுவின் பேரில் பாங்குக்கு இண்டார்ஸ் செய்து அனுப்புவதுடன், தக்க ரசீது பாங்கிலிருந்து கொடுத்தால் பணத்தைப் பெற்றுக்கொள்ள அதிகாரம்பெற்ற பாங்கினுடைய பிரதிநிதியிடம் பணம் கொடுக்கப்படும், அல்லது போஸ்டல் மணியாடர் அல்லது இன்ஷியூரென்ஸ் மூலமாயாவது அனுப்பப்படுமென்று பாங்குக்கு தெரியப்படுத்த வேண்டும். அப்படிப் பணம் போஸ்டல் மணியாடர் அல்லது இன்ஷியூரென்ஸ் மூலமாக அனுப்பும்படி நேர்ந்தால் குத்தகைக்காரன் அவன் கட்டின தொகையை மாற்ற வேண்டுமென்று கேட்கும் மனுவோடுகூட டிரஷரி அல்லது சப்- டிரஷரி உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படி அந்த டிபாஸிட்டு பணத்தை பாங்குக்கு அனுப்ப என்ன சிலவாகுமோ அந்தத் தொகையை அவன் டிரஷரி அல்லது சப்-டிரஷரியில் செலுத்தவேண்டியது. அப்படிக் கட்டிய தொகையில் உபயோகப்படுத்தாமல் எதாவது பாக்கியிருந்தால் அந்த பாக்கியானது டிபாஸிட்டு செய்தவன் செலுத்தவேண்டிய கட்டணத்திற்கு உளவடைத்துக் கொள்ளப்படும். அவ்விதம் டிபாஸிட் செய்யப்படுகிற ஸெக்யூரிடி பத்திரங்கள் அல்லது சேவிங்ஸ் பாங்ஸ் பாஸ் புஸ்தகங்கள் கலெக்டரவர்கள் பேரில் இண்டார்சு செய்யப்படவேண்டும். கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட்டுகள் எந்த கஜானுவில் டிபாஸிட் செய்யப்படுகின்றனவோ அந்த கஜானுவிலேயே அவைகளுக்குள்ள வட்டி கொடுக்கப்பட வேண்டுமென்று இஷ்டப்பட்டால் அது விவரம் அவைகளின் மீது குறிப்பிட்டு எழுதப்படவேண்டும். கோ ஆபரேடிவ் பாங்கு டிபாஸிட்டு சர்டிபிகேட்டுகளின் விஷயத்தில், டிபாஸிட்டுகள் தாலூகா தாசில்தார் பேரில் இருக்க வேண்டியது; அப்படி டிபாஸிட்டு செய்வதில் உண்டாகக்கூடிய நஷ்டங்களுக்கு பாத்தியப்படுவதாய் கண்ட்ராக்டர் எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்ளவேண்டியது; தாசில்தார் வேண்டும்போது பணத்தை பெற்றுக் கொள்ளலாமென்று பாங்குகள் சர்டிபிகேட்டுகளின் பேரில் யாதாஸ்து செய்திருக்கவேண்டியது.

XIII. ரொக்க டிபாஸிட்டை குத்தகையின் கடைசி மாதங்களுக்கு செலுத்தப்படவேண்டிய கிஸ்தி தொகைகளுக்கு ஈடு செய்து கொள்ளப்படும். டிபாஸிட்டு செய்யப்பட்ட ஸெக்யூரிடி பத்திரங்களும் ஸேவிங்ஸ் பாங்கு புஸ்தகங்களும் கோ ஆபரேடிவ் பாங்கு டிபாஸிட்டு சர்டிபிகேட்டுகளும் கவர்ன்மெண்டுக்கு சேரவேண்டிய பூரு கிஸ்தி தொகை ரொக்கமாய் செலுத்தப்பட்டவுடன் வாபிஸ் செய்யப்படும். ஆனால் டிபாஸிட் செய்தவர்கள் ஷை டிபாஸிட்டுகளை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் அவைகள் காலக்கிறயப்படி எடுத்துக்கொள்ளப்படும். பாக்கி எதாவது தொகை சர்க்காருக்கு சேரவேண்டியிருந்தால் அதை ரொக்கமாய் செலுத்தவேண்டும். ஏல விற்பனை நிபந்தனைகளின் X-வது பிரிவின்படியாவது அல்லது எல்லா அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான பொது நிபந்தனைகளில் 37-வது நிபந்தனைபடியாவது தவறுதல் ஏற்பட்டால் சர்க்காருக்கு குத்தகைக்காக செல்ல வேண்டிய தொகை எவ்வளவாயிருந்த போதிலும் டிபாஸிட் செய்யப்பட்ட எல்லா ஸெக்யூரிடிகளும் விற்கப்படும். அப்படி விற்ற பிறகு சர்க்காருக்கு பாக்கி ஏதாவது சேரவேண்டியிருந்தால் அந்தத் தொகை கிஸ்தி பாக்கியைப்போல் வசூலிக்கப்படும்.

**சாராயம் மொத்த விற்பனை பண்ணுவதற்குக் கொடுக்கப்படும் லைஸென்ஸு நிபந்தனை.**

XIV. நாட்டுச்சாராய மொத்த விற்பனைபண்ணும் டெப்போ லைசென்சு ஒவ்வொன்றிற்கும் அந்த டெப்போகாண்ட்ராக்ட் சப்ளைதாரர்களால் ஏற்படுத்தப்பட்டாலும் சரி அல்லது அன்னிய மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டாலும் சரி, வருஷம் ஒன்றிற்கு ரூ. 15 கட்டணம் விதிக்கப்படும். நாட்டுச்சாராயம், மொத்த விற்பனைக்குறிய சுதந்தரத்தைப்பற்றி செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் இதில் சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்டுகளின் கலெக்டர்களிடத்திலே 1938-ம் ஸூ மார்ச்சுமீ முதல் தேதியிலாவது அதற்கு முன்னிட்டாவது வந்து சேரவேண்டியது. ஒவ்வொரு விண்ணப்பத்தோடும் 15 ரூபாய் கட்டணம் அனுப்பவேண்டியது. லைஸென்ஸுகளுக்காக எவர்கள் செய்துகொண்ட விண்ணப்பம் அங்கீகரிக்கப்படவில்லையோ அவர்களுக்கு அந்தக் கட்டணம் திரும்பக் கொடுத்து விடப்படும். இந்த, விளம்பரத்தின்படி லைஸென்ஸுகள் கொடுக்கப்பட்டால் அதனாலே ஏக சுதந்தரமுண்டாகமாட்டாது. இப்போது எந்த லைஸென்ஸுகளுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறதோ அந்த லைஸென்ஸுகள் செலாவணியாய்க் கொண்டிருக்கையில் எப்போதாவது வேறு நபர்களுக்கு அதே நிபந்தனைகளின்மேல் லைஸென்ஸுகள் கொடுக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டு. லைஸென்ஸின் நிபந்தனைகளை சரியானபடி நிரைவேற்றுவதற்கு ஜாமீனாக கலெக்டரால் குறிக்கப்பட்ட தொகையை டிபாஸிட்டு செய்தும், எந்த ஜில்லாவில் நாட்டுச்சாராய டெப்போக்கள் திறக்கவேண்டுமோ அந்த ஜில்லா சப்ளை கண்ட்ராக்ட்தாரரிடமிருந்து டெப்போக்கள் திறக்க வேண்டியதற்கு அனுமதி பெற்றுக்கொண்டாலும் தான், அன்னிய மனிதர்களுக்கு லைஸென்ஸுகள் கொடுக்கப்படும். கண்ட்ராக்ட்தாரரிடம் அனுமதி பெற்று திறக்கப்பட்ட டெப்போக்களை கலெக்டர் இஷ்டப்படி நடத்தாவிட்டால் அவைகளை எப்பொழுதும் மூடிவிடலாம். சில்லரை கடைகளின் பாத்தியதை உடையதாயிருக்கிற மனிதர்களுக்கு மொத்த விற்பனை டெப்போ லைஸென்ஸுகள் கொடுக்கப்படமாட்டாது.

மேற்சொல்லிய பிரிவுகளின்படி கொடுக்கப்படும் லைஸென்ஸுகள் கீழேவரும் அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்கு பொதுவான நிபந்தனைகளையும் ஒவ்வொரு லைஸென்ஸுக்குரிய கீழே சொல்லியிருக்கும் விசேஷ நிபந்தனைகளையும் உடைத்தாயிருக்கும்.

**எல்லா அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான பொது நிபந்தனைகள்.**

1. கலெக்டரால் நியமிக்கப்படும் தேதிகளில் டெப்போக்களும் கடைகளும் திறக்கப்படவேண்டியது. பின்கண்ட 10, 11 அல்லது 40-வது நிபந்தனையின்படி அவைகளை கொஞ்ச காலத்திற்காகிலும் அல்லது காயமாகவாகிலும் மூடப்படவேண்டியது என்று உத்திரவு செய்தாலொழிய தினந்தோறும் அவைகளை திறந்து வைக்கவேண்டியது.

2 ஸர்க்காருக்குச் சொந்தமான அல்லது கட்டுக்கடங்கிய குறிப்பிட்ட இடங்கள் தவிர மற்ற இடங்களிலுள்ள கடைகளை விற்பனைக்குக் கொண்டவர்கள் கடைகளை ஸ்தாபிக்க சரியான இடங்களைப்பற்றி தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. கலெக்டர் அவர்களால் பிரசுரம் செய்யப்படும் எல்லைக்குள் எந்த இடத்திலாவது ரெவினியு, போலீஸ் உத்தியோகஸ்தர்களால் அங்கீகரிக்கப்படும் இடத்தை நியமித்துக்கொள்ள அவர்களுக்கு சுதந்தரமுண்டு. சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின் பிரகாரம் எக்ஸைஸ் லைஸென்ஸிங் போர்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஜாகாக்களில், இஜாராதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் ஷை விதிகளை அனுசரித்து எக்ஸைஸ் லைஸென்ஸிங் போர்டுகளால் அங்கீகரிக்கப்படவேண்டியது. அப்படி நியமித்தது அங்கீகரிக்கப்பட்டதுமான கடைகளின் எல்லைகளை லைஸென்ஸில் எழுதவேண்டியது. மது, அபினி, கஞ்சா முத

லிய லாகிரி வஸ்துக்களின் உடமையும் (லைசென்ஸு பெருத மனிதர்களுக்குரிய விதிகளுக்கு சம்பந்தப்பட்டதைத் தவிர), அல்லது விற்பனையும் அந்த எல்லைகளுக்கு வெளியே தவிர்க்கப்பட்டிருக்கிறது.

3. அப்காரி அல்லது அபினி லைசென்ஸின் முகாந்தரமாய் செய்யும் விற்பனையானது அங்கீகரிக்கப்படும் கட்டிடத்தில் நடத்தவேண்டியது. அந்த கட்டிட முழுமையுமாவது அல்லது அதன் தனிமையான முழு பாகமாவது டெப்போ அல்லது கடையினுடைய முழு உபயோகத்திற்கு வைத்திருக்கவேண்டியது. லைசென்ஸுதாரர்கள் தங்கள் கடைகளிலிருக்கும் இடங்களை பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு திருப்திகரமாய் சுகாதார விளக்கத்தின்படி பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். முனிஸிபாலிடிகளிலும் 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜன சங்கியையுள்ள டவுன்களிலுமுள்ள சாராயக்கடை அல்லது டாவரன் விஷயங்களில் வீதிப்புரம் தவிர வேறு எவ்விதமாவது உள்ளே போகவாவது அல்லது வெளியே வரவாவது எந்த வழியும் இருக்கக்கூடாது. வேறே கதவுகளிருக்கும் பக்ஷத்தில் அவைகள் எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தரால் ஸீல் செய்யப்பட்டு பூட்டு போட்டு மூடப்படவேண்டியது. கடையின் உள்பக்கம் பகலில் போதுமான வெளிச்சமுள்ளதாயிருக்கவேண்டும். உள்பக்க முழுவதும் முன் கதவின் மூலமாய் தெரியும்படியாயிருக்கவேண்டும். மேலும் கடையானது கடையில் விற்பவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் அல்லது காவல்காரர்களுக்கும் தவிர இதராளுக்கு வாசஸ்தலமாக இருக்கக்கூடாது. டெப்போ அல்லது கடைக்கு சமீபமாயுள்ள குடியிருக்கிற வீட்டிற்கும் வழியிருந்தால் அதை இராக்காலத்தில் பூட்டி வைக்கவேண்டியது.

4. அன்னிய மது விஷயத்தில் ஒரே மனிதன் இரண்டு அல்லது அதிகமான அன்னிய மது லைசென்ஸுகளை வைத்துக்கொண்டிருக்கிறதும், மருந்து செய்து விற்பவர்களும் வயித்தியர்களும், தவிர மற்றவர்களால் ஒவ்வொரு லைசென்ஸையும் அனுசரித்து விற்பனைகள் பிரத்தியேகமான இடங்களில் நடத்தப்படவேண்டியது.

ஆனால் கஞ்சா, அபினிக் கடைகள், ஒரு கடையிருக்கும் பாகம் மற்றொரு கடையிருக்கும் பாகத்தினின்று நன்றாய் தடுக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் ஒரே கட்டிடத்தில் இருக்கலாம்.

5. கடையிருக்கும் ஸ்தலத்தில் சாப்பிடுவதற்கு விற்கும்படியான மதுபான கடைகளில் பிரத்தியேகமாயிருந்து மதுபானஞ் செய்யும்பொருட்டு கலெக்டரால் கட்டணமின்றி ஸ்பெஷல் லைசென்ஸு கொடுக்கப்படும். ஆனால் மேற்கூறிய பிரத்தியேகமான இடம் வாசற்படியிலிருந்து உள்புறம் முழுவதும் திருஷ்டிக்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். அல்லாமலும் அந்த பிரத்தியேகமான இடத்திற்கும் வழி கடையின் துவாராவாகவாவது வேறு வழியாகவாவது இருக்கவேண்டும். ஆனால் அந்த வழியின் முன்புரத்தில் இது பிரத்தியேகமான இடமென்று சரியான பலகை போட்டுவைக்கவேண்டியது.

6. ஒவ்வொரு டெப்போ அல்லது கடைக்கு முன்புறத்தில் ஒரு பலகையை மாட்டி வைக்கவேண்டியது ; அந்தப் பலகையில் லைசென்ஸின் சுபாவம், அதனுடைய நெம்பர், லைசென்ஸுதாரனுடைய பெயர் (அன்னிய மது விஷயத்தில் தவிர) வழங்கும் விலை இவைகளை காட்டப்படவேண்டியது. இந்த விசேஷங்கள் அந்தந்த இடங்களில் வழங்கும் சுதேச பாஷையிலும், டாவரன், மொத்த விற்பனை செய்யும் டெப்போக்கள் விஷயங்களில், இங்கிலீஷிலும் கூட ஸ்பஷ்டமாய் வர்ணத்தினால் எழுதப்பட்டிருக்கவேண்டியது. லைசென்ஸை உள்ளே தெரியும்படியான இடத்தில் தொங்கவிட்டு வைத்திருக்கவேண்டியது.

7. லைசென்ஸில் சொல்லியிருப்பவைகளையல்லாத மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துவையாகிலும் அல்லது ஒரு கம்பவுண்டிங் லைசென்ஸின் விதிகளின்படி இருந்தாலொழிய, மதுவில் வர்ணம் வாசனைக்கு உபயோகிக்கும் அல்லது உபயோகப்படுத்தத்தக்க எவ்வித எஸ்ஸென்ஸு அல்லது வஸ்துவையாகிலும் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட இடங்களில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

8. தேவைக்கு எவ்வளவு இருந்தால் போதுமென்று கலெக்டர் அவர்கள் அபிப்பிராயப்படுகிறரோ அவ்வளவு மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள், அல்லது மேற்கூறியபடி கலெக்டரவர்களால் அளவுகள் நிர்ணயிக்கப்படாவிட்டால் அந்த இடத்தில் சாதாரணமாக எவ்வளவு தேவையாயிருக்குமோ அந்த அளவு மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் கடைகளிலும் டெப்போக்களிலும் வைத்திருக்கப்படவேண்டியது.

9. யாதொரு சாராயக் கடையும் காலையில் தூத்துக்குடியில் 10 மணிக்கு முன்னும் இதர இடங்களில் 9-30 மணிக்கு முன்னும் திறக்கக்கூடாது. டாவரன் அல்லது பீர் கடைகள் காலையில் 9-30 மணிக்கு முன் திறக்கக்கூடாது. கள்ளுக்கடைகள் சென்னை நகரில் மில்களுக்கு அருகாமையிலுள்ள குறிக்கப்பட்ட கடைகள் காலை 7-30 மணிக்கு முன்னும் சென்னை நகரில் இதர இடங்களில் காலை 6 மணிக்கு முன்னும் தூத்துக்குடி, மங்களூர் டவுன்களில் காலை 7 மணிக்கு முன்னும், இதர இடங்களில் சூர்யோதயத்திற்கு முன்னும் திறக்கக்கூடாது. மற்ற இதர கடைகளை சூர்யோதயத்திற்குமுன் திறக்கக்கூடாது. சாராய டெப்போக்களை காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 2 முதல் 6 மணி வரையிலும் திறந்து வைக்கவேண்டியது. அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களிலுள்ள எந்தவிதக் கடைகளையும் காலை 6 மணிக்கு முன் திறக்கக்கூடாது.

10. (a) டெப்போ அல்லது கடையை பிரத்தியேகமான உத்திரவில்லாமல் கீழே குறிக்கப்பட்ட காலங்களுக்குப் பிறகு திறந்து வைக்கக்கூடாது—

| | |
|---|---|
| மதராஸ் டவுனிலுள்ள சாராயக் கடைகளும், கள்ளுக்கடைகளும், டாவரன்களும் .. | இரவு 10 மணி. |
| எல்லா முனிஸிபாலிடிகளிலும், கலெக்டர் அவர்களால் போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் 21 (9) பிரகாரம் “ டவுன் ” என்று பிரசுரம் பண்ணப்பட்ட இடங்களிலும், மலையாளம் ஜில்லாவிலுள்ள படகார, பொன்னனி, தானூர், பெரோக், மலப்புரம் இவைகளிலுமுள்ள, சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும், பீர் கடைகளும், டாவரன்களும் .. .. .. .. .. | இரவு 9 மணி. |
| நீலகிரி ஜில்லாவிலுள்ள சாராயக்கடைகளும் பீர் கடைகளும் .. .. .. .. | இரவு 9 மணி. |
| மேற்கூறிய இடங்களிலுள்ள இதரவிதக் கடைகளும், அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களைத்தவிர மற்ற இடங்களிலுள்ள எல்லாவிதக் கடைகளும் .. .. | இரவு 8 மணி. |
| அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களிலுள்ள எல்லாவிதக் கடைகளும் .. .. | இரவு 9 மணி. |
| டெப்போக்கள் .. .. .. .. | மாலை 6 மணி. |

எந்த டெப்போவையும் சூரியாஸ்தமனத்திற்கு மூடிவிடும்படி உத்தரவு செய்யவும், போலீசாருடைய ரிப்போர்ட்டின் பேரிலாவது அல்லது மற்ற யாது தகுதியான காரணங்களுக்காவது எந்த கடையும் பொது நன்மையை அனுசரித்து வழக்கமாய் மூடுகிற நேரத்திற்கு முந்தி மூடிவிடும்படி உத்தரவு செய்யவும் கலெக்டர் அவர்களுக்கு அதிகாரமுண்டு. தகுந்த காரணங்களின்பேரில் ரெவினியூ போர்டார் எந்த விதமான அல்லது எந்த விதங்களான அல்லது எல்லாவித அப்காரி, அபினி லைசென்ஸ் பெற்ற இடங்களையும் மேலே குறிக்கப்பட்ட காலங்களுக்கு முந்தி மூடும்படி பொதுவாக உத்தரவு செய்யலாம்.

குறிப்பு.—மதராஸ் டவுனில் சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும், டாவரன்களும் நியமிக்கப்பட்ட நேரத்தில் மூடப்படவேண்டியதைப்பற்றி இதனடியிற்கண்ட முறை அனுசரிக்கப்படவேண்டியது.

லைசென்ஸுதாரன் வாடிக்கைகாரர்களுக்கு கடை சாத்தப்படும் நேரத்திற்குப் பிறகு மது வினியோகிக்கப்படமாட்டாது என்று, முதலாவதாக அந்த நேரத்திற்கு அரை மணி முன்பாகவும் இரண்டாவது 15 நிமிஷங்கள் முன்பாகவுமாக இரண்டு தரம் எச்சரிக்கை செய்யவேண்டியது. கடை மூடப்படும் நேரத்திற்கு முன்னமே வாடிக்கைகாரர்கள் கடையினின்றும் வெளியில் போகும்படி செய்வதற்கும் கடையை சுத்தம் செய்வதுள்பட கடையில் செய்யவேண்டிய

வேலைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டு நியமிக்கப்பட்ட நேரத்தில் கடையை மூடும்படி செய்வதற்கும் லைஸென்ஸுதாரன் கடமைப்பட்டவனாவான்.

(b) ரெவினியூ போர்டார் அவர்கள் குறிப்பிட்ட கடைகளையாவது அல்லது ஒரே விதமான கடைகளையாவது அல்லது எல்லா விதமான கடைகளையாவது பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும், லோகல் போர்ட்ஸ், முனிஸிபாலிடிகள், லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில், அஸெம்பிளி முதலியவைகளுக்காக நடக்கும் எலெக்ஷன் தினங்களிலும் மூடும்படி உத்திரவு செய்யலாம். இப்படிப்பட்ட நிபந்தனைகள் மது அல்லது லாகிரி வஸ்துக்கள் விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட சுயாதீன கடைகளின் விஷயங்களில் கடைகளின் ஏலத்திற்கு முன்பு கலெக்டர் அவர்களால பிரசுரம் செய்யப்படும். ரெவினியூ போர்டார் அவர்களுடைய முன் உத்தரவின்பேரில்,—

(i) குறிக்கப்பட்ட கடைகளை குறிப்பிட்ட திருவிழா காலங்களில் மூடிவைக்கவேண்டியதென்று ஏல காலத்தில் பிரசுரம் செய்யவும், மார்க்கெட் அல்லது சந்தைகள் கூடும் இடங்களுக்கு சமீபத்திலிருக்கும் கடைகள் விஷயத்தில் சந்தை நாட்களில் வழக்கப்படி விற்பனை செய்யும் நேரத்தை பொதுவாகக் குறைக்கப்படுமென்றாவது அல்லது ஷை கடைகள் பொதுஜனங்கள் குடிப்பதை அதிகச் செய்வதாக தெரியவந்தால், இஜரா நடுவில் விற்பனை நேரம் குறைக்கப்படுமென்றாவது பிரசுரம் செய்யவும்,

(ii) அதிகமாய் தொழிலாளர்கள் ஒன்றுசேரக்கூடிய பாக்டெரி, மில் முதலான இடங்களுக்கருகாமையில் குறிப்பிட்ட கடைகளை யுக்தமானால் வேலை நாட்களில் காலை 11-30 மணி முதல் மாலை 1-30 மணி வரையிலும், சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களிலும் மாலையிலும், ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 11-30 மணிக்குமேல் 4 மணி வரையிலுள்ள நேரத்தை தவிர பாக்கி காலங்களிலும் மூடிவிடும்படி உத்தரவு செய்யவும்,

கலெக்டர் அவர்களுக்கு அதிகாரமுண்டு. இப்படிப்பட்ட கடைக்காரர்களுக்கு கொடுக்கப்படும் லைஸென்ஸுகளில் இது விபரத்துக்கு ஒரு பிரத்தியேகமான நிபந்தனை கலெக்டரவர்களால் சேர்க்கப்படும்.

குறிப்பு.—சென்னை நகரில் மில்களுக்கு அருகாமையிலுள்ள குறிக்கப்பட்ட கடைகளை சாதாரணமான வேலை நாட்களில் காலை 11–30 மணி முதல் மாலை 1 மணி வரையிலும், சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் காலை 11–30 மணி முதல் மாலை 1 மணி வரையிலும் பிறகு மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்டிகை தினங்களாகிய மில் விடுமுறை தினங்களிலும் காலை 11–30 மணிக்குமேல் மாலை 4 மணி வரையிலுள்ள நேரத்தை தவிர பாக்கி காலங்களில் மூடப்படும்.

(c) நீலகிரி ஜில்லாவிலும், மதுரை ஜில்லா கோடைக்கானலிலும் உள்ள ஹோட்டல்கள் இரவு 10 மணிக்கு மூடிவிடவேண்டும்.

(d) சென்னபட்டணம் அல்லாத இதர ஜில்லாக்களிலுள்ள ரிப்ரெஷ்மெண்டு ரூம்களும், பார்களும் சென்னப்பட்டணம், நீலகிரி ஜில்லாக்கள் தவிர மற்ற ஜில்லாக்களிலும், மதுரை ஜில்லாவில் கோடைக்கானல் தவிர மற்ற இடங்களிலும் உள்ள ஹோட்டல்களும், இரவு 9 மணிக்கு மூடிவிடவேண்டும். சென்னை நகரில் ரிப்ரெஷ்மெண்டு ரூம்களும், ஹோட்டல்களும், ஹோட்டல் பார்களும், இரவு 10 மணிக்கு மூடிவிடவேண்டும். ஆனால் மதராஸ் கலெக்டரும் போலீஸ் கமிஷனரும் இருவரும் சேர்ந்து இவைகளை இரவு 11 மணி வரையில் திறந்துவைக்க அனுமதி கொடுக்கலாம்.

(e) ரெயில்வே ரிப்ரெஷ்மெண்டு ரூம்கள் சாதாரணமாய் இரவு 9 மணிக்கு மூடிவிடவேண்டும். ரயில் வண்டிகள் வந்து போகும் சமயங்களில் வாஸ்தவமான பிரயாணிகளுக்கு மது விற்பனை செய்வதற்கு ஷை லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களை இரவு 9 மணிக்கு மேல் எந்த சமயங்களில் திறந்து வைக்கலாமென்று ஷை லைசென்ஸுகளில் குறிப்பதற்கு கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. ரெயில்வே டைம்டேபில்களில் மாறுதலுக்குத் தகுதியாக இரவு 9 மணிக்கு மேல் திறக்ககூடிய சமயங்களை இஜாரா மத்தியில் கலெக்டர்கள் மாற்றலாம்.

11. டெப்போக்களையும், கடைகளையும் ரெஜிமெண்டாகிலும், அதில் ஒரு துக்குடியாகிலும் சமீபத்தில் போய்க்கொண்டிருக்கையிலாவது அல்லது இறங்கியிருக்கையிலாவது கலெக்டர் உத்தரவு பண்ணினால் மூடிவிடவேண்டியது. மதசம்பந்தமான ஏதாவது கலகம் சச்சரவு நேரிடுகிற சமயத்தில் கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸர் கடைகளை மூடிவிட உத்திரவு செய்யலாம். சமீபத்தில் ஏதாவது சச்சரவு கலகம் நேரிடும் பக்ஷத்தில் அல்லது நேரிடும்போல் தோன்றும் பக்ஷத்தில் லைஸென்ஸுதாரர்கள் டெப்போ அல்லது கடைகளை மூடிவிடவேண்டியது.

12. விற்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் நல்ல சரக்காயும் கலப்பில்லாததாயுமிருக்கவேண்டியது. மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களின் லாகிரித் தன்மையை அதிகப்படுத்துகிறதற்காவது வேறெந்த காரியத்துக்காவது எந்த வஸ்துவையும் சேர்க்கக்கூடாது. ஆனால் ஷை நிபந்தனை லைஸென்ஸின் விதிகளின்படி கஞ்சா அபினியிலிருந்து லாகிரி வஸ்துக்களையும் அல்லது அபினி கலந்த வஸ்துவையும் செய்வதையாவது மதுக்களை கம்பவுண்டு, பிளண்டு பண்ணுவதையாவது தடுக்காது. பாட்லிங் லைஸென்ஸின் விதிகளை அனுசரித்ததன்றியில் மதுவானது புட்டிகளில் அடைக்கப்படக்கூடாது. பலவித மதுக்களை கலந்து அவைகளின் ஒன்றின் பெயரிட்டு விற்கவும் கூடாது.

13. அப்காரி அல்லது அபினி கடைகளில் மது அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்வதற்கு ஷை கடைக்காரர்களின் சொந்த குடும்பஸ்தர்களை தவிர வேறு யாதொரு ஸ்திரீகளையும் கலெக்டருடைய பிரத்தியேகமான உத்தரவன்னியில் நியமிக்கக்கூடாது.

14. குஷ்டரோகம் அல்லது ஒட்டுவாரொட்டும்படியான வியாதியினால் அவஸ்தைப்படுகிற யாதொருவனும், அப்காரி அல்லது அபினி ஸ்வதந்திரத்தை வைத்துக்கொள்ளக்கூடாது. அப்காரி ஸ்வதந்திர விஷயத்தில் இண்டியன் மெஜாரிடி ஆக்ட் பிரகாரம் மெஜாரிடி அடையத்தக்க வயதுக்குட்பட்டவர்களுக்கும் அபினி ஸ்வதந்திர விஷயத்தில் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கும் லைஸென்ஸுகள் கொடுக்கப்படமாட்டாது. மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை 18 வயதுக்குட்பட்ட (அபினி விஷயத்தில் 20 வயதுக்குட்பட்ட) சிறுவர்கள் அல்லது குஷ்டரோகம் அல்லது ஒட்டுவாரொட்டும்படியான வியாதியினால் அவஸ்தைப்படுகிறவர்கள் விற்பனை பண்ணுவது அல்லது கொண்டுபோவது கூடாது. அவைகளை விற்பனை பண்ணுவதறகாக லைஸென்ஸ் கொடுக்கப்பட்ட கடைகளில் அல்லது டெப்போக்களில் மேலே விவரித்தவர்களை எந்த வேலையிலும் நியமிக்கக்கூடாது. கலெக்டரவர்கள் முன்னுத்திரவின்றி இந்தியன் பினல் கோடின் பிரகாரம் தண்டனைப்பட்டவர்களை மது, அபினி, கஞ்சாவை விற்பனை செய்யவாவது, கொண்டுபோகவாவது நியமிக்கக்கூடாது. டிவிஷனல் ஆபீஸர்கள் யுக்தப்படி டெப்போ அல்லது கடையில் மேல்பார்வை பார்க்கவோ அல்லது நடத்தவோ அல்லது கள்ளுக்கடை சப்ளைக்காக முத்திரை போடப்பட்டிருக்கும் மரங்களிருக்கும் தோப்பில் பாளைத்தட்டி கள் இறக்கும் சம்பந்தமாகவோ எவ்விதத்திலாவது வேலைக்கு வைக்கப்பட்டிருக்கிற அல்லது வேலைக்குவைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிற நபர்களின் பெயர்களைக் கேட்டனுப்பி அந்த நபர்களில் தமக்கு யார் இஷ்டமில்லையோ அவனை லைஸென்ஸுதாரன் வேலையில் வைத்துக்கொள்ளக்கூடாதென்று உத்தரவு செய்யலாம். கலெக்டர் அவர்களால் அப்காரி அல்லது அபினிக் கடைகள் ஏலங்களில் விலை கேட்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கும் எவனும் மது, அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்வதற்காக லைஸென்ஸு பெற்ற எந்த டெப்போவிலாவது கடையிலாவது மேல்பார்வை பார்க்கவோ, நடத்தவோ அல்லது வேறு எந்த விதத்திலாவதோ வேலைக்கு நியமிக்கக்கூடாது.

குறிப்பு.—கள்ளு அல்லது சாரயக்கடைகளில் தின்பண்டங்கள் விற்பனை செய்வதற்கும் இந்த நிபந்தனை உண்டு.

15. (a) I (1) சர்க்கார் போர்க்கப்பலைச் சேர்ந்த ஸெயிலருக்காகிலும், சோல்ஜர் அல்லது அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவருக்காகிலும் ; அல்லது

(2) பாரெக்ஸில் வசிக்கும் மற்றவர்களுக்காகிலும் ;

(3) கடையில் விற்பவர்களுக்கு தெரிந்த, அல்லது அவர்களால் அநுமானிக்கப்படுகிற, காம்ப் பாலோயர்களுக்கு அதாவது சொந்த வேலைக்காரர்கள் தவிர்த்த கன்டோன்மெண்டில் வசிக்க உரிமையுற்ற எல்லாவிதமான பாலோயர்களுக்கும் அவர்கள் அலுவல் செய்துகொண்டிருந்தாலும் சரி, செய்யாமலிருந்தாலும் சரி ;

மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்ய லைசென்ஸு பெற்ற இடமிருக்கும் மிலிடரி ஸ்டேஷன் கமாண்டிங் ஆபிஸரால் கொடுக்கப்பட்டு, அந்த மிலிடரி ஸ்டேஷன் ஸ்டாப் ஆபிஸரால் கையெழுத்திடப்பட்டு, கமிஷனர் அவர்களால் மேற் கையெழுத்துப்பண்ணப்பட்ட பர்மிட்டின்படியல்லாமல் மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கவும் கூடாது கொடுக்கவும் கூடாது. அந்தப் பர்மிட் லைஸென்ஸு பெற்ற இடத்தில் லைஸென்ஸோடு காட்டப்படவேண்டியது. அந்தப் பர்மிட்டில், அது கொடுக்கப்பட்ட காரணத்தின்மேல், பொது ஜனங்களுக்குச் செய்யும் விற்பனையில் கமிஷனர் அவர்களுக்கு யுக்தமாகத் தோன்றும் நிர்பந்தங்களை விதிக்கலாம்.

II. அலுவலிலிருக்கும் போலீஸ்தாரர்களுக்கும் எக்ஸைஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், ரெயில்வே வேலைக்காரர்களுக்கும், மோட்டார் பஸ், லாரி, டாக்ஸி இவ்வண்டிகளிலுள்ள டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் ;

III, எக்காலத்திலும் யாதொரு—

(1) போலீஸாருடைய காவலில் போகிற யுரோப்பியன் (நாடோடி) வேக்ரண்டுக்காகிலும் ;

(2) பைத்தியக்காரனுக்காகிலும் ; அல்லது

(3) லாகிரி வஸ்துக்களை சாப்பிட்டு வெறிகொண்டிருக்கிறனென்று அறியப்படுகிற அல்லது யூகிக்கப்படுகிற எவனுக்காகிலும் ;

(4) பொது சமாதானத்துக்குக் கெடுதலான கலகம் அல்லது சச்சரவிலாவது அல்லது வேறெந்த குற்றத்திலாவது சம்பந்தப்படுகிறனென்று அறியப்படுகிற அல்லது அநுமானிக்கப்படுகிற எவனுக்காகிலும் ;

மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கவுங்கூடாது, கொடுக்கவுங்கூடாது. மேலே (i) பிரிவில் கண்டிருக்கிறவர்களுக்கு ஷெ அதிகாரிகள் அந்தந்த ஊர் எக்ஸைஸ் அதிகாரிகளுடன் யோசித்து லைஸென்ஸில் இன்னின்ன மது விற்கலாமென்று காணப்பட்டிருக்கும் பட்சத்தில் அவைகள் தவிர வேறு மதுக்களை விற்கக்கூடாது.

(b) மது அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை 18 வயதுக்குட்பட்ட சிறுவன் அல்லது சிறுமிக்காகிலும், அல்லது எந்த பருவமான ஸ்திரீக்காகிலும் எக்காரணத்தைக்கொண்டும் விற்கவுங்கூடாது, கொடுக்கவுங்கூடாது ; அபினியை இருபது வயதுக்குட்பட்ட சிறுவன் அல்லது சிறுமிக்காகிலும் அல்லது எந்த பருவமான ஸ்திரீக்காகிலும் எக்காரணத்தைக்கொண்டும் விற்கவுங்கூடாது, கொடுக்கவுங்கூடாது.

(c) யாதொரு குழந்தை, அல்லது பதினெட்டு வயதிற்குள்பட்ட சிறுவனையாவது அல்லது சிறுமியையாவது அல்லது 13-வது கண்டிஷன் பிரகாரம் அனுமதி பெற்றவர்கள் தவிர வேறு எந்த பருவமான ஸ்திரீயையாவது கடையிருக்கும் ஸ்தலத்தில் சாப்பிடுவதற்கு விற்கும் கடைகளினுடைய ஸ்தலங்களுக்குள் வருவதற்கு விடக்கூடாது.

குறிப்பு.—(1) இந்தியன் சிப்பாய்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்களுக்கும், அவர்களைப் பின்தொடர்பவர்களுக்கும், அவர்கள் தங்கள் ரெஜிமெண்டை விட்டு லீவின்மேலிருக்கும்போது (i), (ii) குறிப்பிட்ட நிபந்தனைகள் சம்பந்தப்படமாட்டா.

(2) பிக்ஸட் பீஸின்மேல் அல்லது விற்பனைக்குத் தக்க பீஸின்மேல் கொடுக்கப்பட்ட அன்னியதேச மது லைஸென்ஸுகள் விஷயத்தில் பருவமான ஸ்திரீகளுக்கு சம்பந்தப்பட்ட (b), (c) ஷரத்துக்களில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் சம்பந்தப்படமாட்டா.

16. கடைகளில் மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை பணத்திற்குத் தவிர, வேறொன்றுக்கும் விற்கக்கூடாது. பணந்தவிர வேறெந்த வஸ்துவையாவது கொடுக்கவந்தால் லைஸென்ஸுதாரன் அதிக சமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காவது போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதைத் தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கவேண்டியது. இந்த நிபந்தனையானது கடைகளுக்கு வெளியில் பானஞ்செய்வதற்கு சீமைச்சாரயம் நெடுநாளாக விற்பனை செய்யவும் கடைக்காரர்களும் கௌரவமுள்ள வர்த்தகர்களும் வர்த்தக முறமையில் கடனுக விற்பனை செய்வதின்று தடுப்பதற்கில்லை.

17. ரெவினியூ போர்டார் அவர்களால் அப்போதைக்கப்போது விற்பனைக்காக ஏற்படுத்தப்படும் தாழ்ந்த விலைகளை* அல்லது உயர்ந்த விலைகளைக்† குறைத்தாவது உயர்த்தியாவது மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கக்கூடாது

18. மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை, லைஸென்ஸில்லாமல் வைத்துக்கொண்டிருப்பதற்காக அடியில்கண்டபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு மேல், ஊர்ஜ்ஜிதமுள்ள உத்தரவுச் சீட்டில்லாமல், யாதொரு லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடத்திலிருந்து ஒரே தடவையில் எவனையும் கொண்டுபோகும்படி அனுமதி கொடுக்கக்கூடாது. அல்லது, மது, மொத்த விற்பனை டெப்போக்களில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவுகளுக்குக் குறைவாய் விற்கக்கூடாது :—

| சாராயம் | கள் | கஞ்சா | அபினி | தென்னங்கள்ளுச்சாராயம் |
|---|---|---|---|---|
| ஒரு திராம் என்று பிரத்தியேகமாய் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான, இடங்களில் தவிற மற்ற இடங்களில் 4 திராம். தஞ்சாவூர் ஜில்லாவில் சீர்காழி, திருத்துரைப்பூண்டி தாலூகாக்களிலும், ராமனுதபுரம் ஜில்லாவில் திருவாடானை, பரமக்குடி தாலூகாக்களிலும் நீலகிரி ஜில்லாவிலும் 2 திராம். | ஒரு திராம் என்று பிரத்தியேகமாய் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான இடங்களில் தவிற மற்ற இடங்களில் $\frac{1}{2}$ காலன். | எஜென்ஸி டிராக்டுக்களில் கஞ்சா 6 தோலாவும், பங்கி 10 தோலாவும், மதராஸ் டவுனில் கஞ்சா 2 தோலாவும், பங்கி 10 தோலாவும், அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களில் கஞ்சா ஒரு தோலாவும் இதர இடங்களில் கஞ்சா 3 தோலாவும், பங்கி 10 தோலாவும், மேற்கண்ட அளவு அடங்கிய லாகிரி வஸ்துக்களும். | எஜென்ஸி டிராக்டுகளில் இரண்டு தோலா சுத்த அபினி அல்லது இரண்டு தோலா சுத்த அபினி அடங்கிய எந்த அளவு அபினி கலந்த வஸ்துவும் ; அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களில் $\frac{1}{2}$ தோலா சுத்த அபினி அல்லது $\frac{1}{2}$ தோலா சுத்த அபினி அடங்கிய எந்த அளவு அபினி கலந்த வஸ்துவும் இதர இடங்களில் ஒரு தோலா சுத்த அபினி அல்லது ஒரு தோலா சுத்த அபினி அடங்கிய எந்த அளவு அபினி கலந்த வஸ்துவும். | 2 இம்பீரியல் காலன். |

* மதுக் கடைகளுக்கு—1934-ம் வருஷம் பிப்ரவரி மீ 1-வ யுள்ள கமிஷனரவர்களின் நோட்டிபிகேஷன் நெ. 3 பிரகாரம் பார்க்கவும்.

† அபினிக்கடைகளுக்கு—விசாகப்பட்டணம், கிழக்கு கோதாவரி ஜில்லாவிலுள்ள எஜென்ஸி டிராக்டுகளில் ஒரு தோலாவுக்கு ரூ. 1–3–0 ஆக ஒரே விலையாக நியமித்திருக்கிறது.

ராதாரிகள் அச்சடித்த புத்தகங்களிலிருக்கவேண்டியன. அப்புத்தகங்கள் எல்லா எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் ஆபீசுகளிலும் கிடைக்கும்.. அவைகளின் விலையை சர்க்கார் கஜானுவில் கட்டிவிட்டு ரசீதைக் கொண்டுபோய்க் கேட்கவேண்டும். பிற்பாடு உபயோகப்படுத்துவதற்காக விவரப் பதிவுகளில்லாத ராதாரிச்சீட்டுகளை கையெழுத்து செய்தல்கூடாது.

குறிப்பு.—மதராஸ் ஆப்காரி ஆக்ட் 13-A பிரிவின்கீழ் 1937-ம் ஹு அக்டோபர்மீ 1உ முதற்கொண்டு இந்த ராஜதானியில் சேலம் ஜில்லாவிற்கு வெளியில் அந்த ஜில்லாவின் எல்லைக்கு 10 மைலுக்குள் இருக்கும் இடங்களில், மேற்கூறிய ஆக்டின்கீழ் கொடுக்கப்பட்ட லைஸென்ஸு அல்லது பர்மிட் இல்லாமல், எவனும் எந்த அளவு சாராயத்தையாவது, கள்ளையாவது அவைகளை விற்பதற்காக எற்படுத்தப்பட்டிருக்கும் கடைகளுக்கு வெளியே வைத்துக் கொள்ளக்கூடாது என்று கவர்ன்மென்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

19. ரெவின்யு போர்டாரவர்களால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்பட்ட நிறைகளையும் அளவை கருவிகளையும் மாத்திரம் யாதொரு லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களில் வைத்துக்கொண்டிருக்கலாம். அல்லது உபயோகப்படுத்தலாம். மேலும், கலெக்டரவர்கள் உத்திரவு செய்தால் அந்தக் கருவிகளை டிஸ்ட்ரிக்டிலுள்ள முத்திரை குத்தும் இலாகாவினால் பரிசோதித்து முத்திரை போடப்படவேண்டியது. குறைந்த அளவையாவது குறைந்த நிறையையாவது கண்டிப்பாய் செய்யக்கூடாது.

20. டெப்போ அல்லது கடைகளில் யாரும் குடித்து வெறிகொள்வதும் தாறுமாறு பண்ணுவதும் சூதாடுவதும் கூடாது, டெப்போ அல்லது கடைகளில் எவ்விதமான கூத்து, ஆட்டம், தமாஷா முதலானதும் நடத்தக்கூடாது. லைஸென்ஸுதாரர்கள் மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களின் விற்பனை விஷயமாய் தெருக்களிலும் மார்க்கெட்டுக்கருகாமையிலும் தண்டோரா மூலமாயாவது நோட்டீஸுகள் மூலமாயாவது பிரசுரம் செய்வதினின்றும் வியாபாரத்தை அதிகரிக்கவாவது அல்லது வேறு யாதொரு காரணத்திற்காகவாவது மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை இனமாகக் கொடுப்பதினின்றும், கொடுக்க யத்தனிப்பதினின்றும் தடுக்கப்படுகிறார்கள். வாடிக்கைக்காரர்களை கடைகளுக்கு கொண்டுவரும்பொருட்டு மோட்டார் அல்லது மற்ற வண்டிகளை அமர்த்துவதினின்றும் அவர்கள் தடுக்கப்படுகிறார்கள்.

21. கடைகளிலும் டெப்போக்களிலும் கொள்ளைக்காரர்களுக்கும் திருடர்களுக்கும் கலகம் செய்பவர்களுக்கும் இருப்பிடம் கொடுக்கக்கூடாது; அப்படி சந்தேகிக்கப்பட்டவர்கள் யாராவது அவைகளுக்கு, வருகிறபட்சத்தில் அவர்களைக் குறித்து அதிசமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் போலீஸ் உத்தியோகஸ்தருக்காகிலும் அறிக்கை பண்ணவேண்டியது.

22. இராக்காலத்தில் கடை அல்லது டெப்போவில் தங்குவதற்கு யாருக்கும் இடம் கொடுக்கக்கூடாது.

23. நிர்ணயிக்கப்பட்ட நமூனுவில் தினந்தோரும் இங்கியில் சரியான வரவு செலவு கணக்குகள் வைக்கவேண்டியது. பிரத்தியேகமான உத்திரவில்லாவிடில் லைஸென்ஸுவாரியாக கணக்கு வைக்கவேண்டியது. கணக்குகள் அச்சடித்த புத்தகங்களில் இருக்கவேண்டியது. கணக்கு புத்தகங்களை அந்தந்த இடங்களிலிருக்கும் ரிவினியு உத்தியோகஸ்தர்களிடத்தில் விற்கும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களோடு வருகிற ராதாரிகளையும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட ராதாரிகளின் எதிரிடைகளையும் கணக்குகளிலுள்ள விபரங்களுக்கத்தாட்சியாக ஜாக்கிரதையுடன் ஒழுங்காய் சேர்த்துவைக்கவேண்டியது. கணக்குகளையும் ராதாரி எதிரிடைகளையும் லைஸென்ஸில் கண்ட காலங்கடந்து ஒருவருஷம் வரையில் காப்பாற்றிவைத்து, அவைகளை இஜாரா முடியும் காலத்தில் ரேஞ்சு சப்-இன்ஸ்பெக்டரிடமாவது அல்லது புதிதாய் வரும் இஜாராதாரரிடமாவது கொடுத்துவிடவேண்டியது. எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்களில் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டருடைய அந்தஸ்துக்குக் குறையாத ஒரு உத்தியோகஸ்தர் கேட்டால் அவைகளை ஆஜர்ப்படுத்தவேண்டியது.

24. எலமன்றி நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுடைய அல்லது விற்பனைக்குத்தக்க கட்டணங்களுடைய லைஸென்ஸுகள் தவிர மற்ற லைஸென்ஸுகள் விஷயங்களில் கிரயத்துக்கு கொள்ளப்பட்ட சுதந்தரத்தின் தொகையானது கடையிருக்கும் தாலூகாவிலுள்ள கவர்ன்மெண்ட் கஜானுவிலாவது அல்லது அதே தாலூகாவிலுள்ள அதிகாரம் பெற்ற ஒரு கிராம உத்தியோகஸ்தரிடமாவது பன்னிரண்டு மாதாந்திரத் தவணைகளில் எப்ரல் அல்லது அக்டோபர் மாதம் முதல்கொண்டு ஒவ்வொரு மாதமும் முதல் டிரஷரி தேதியிலாவது அல்லது அதற்கு முன்பாகவாவது அட்வான்சாக செலுத்தப்படவேண்டியது. கள்ளுக் கடைகளின் மரவரியையும் கடையிருக்கும் தாலூகாவிலுள்ள ஒரு கவர்ன்மென்ட் கஜானுவிலாவது அல்லது அதே தாலூக்காவிலுள்ள அதிகாரம் பெற்ற ஒரு கிராம உத்தியோகஸ்தரிடமாவது, செலுத்தவேண்டும்; திருநெல்வேலி ஜில்லாவிலும் ராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமனுதபுரம், முதுகொளத்தூர், பரமக்குடி தாலூகாக்களிலுமுள்ள கள்ளுக்கடை விஷயங்களில் கடைகளின் கிஸ்தியல்லாமல் ஒவ்வொரு கடைக்கும் கொடுக்கப்படவேண்டியதாயும், கொடுப்பதாக உடன்படிக்கைபோல் கடையைக்கொள்ளப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட துகையானது ரெவினியூ போர்டார் அவர்கள் நிர்ணயிக்கப்படும் தவணைகளில், மதராஸ் டவுனில் கிஸ்தி ஒவ்வொரு மாதமும் பத்தாவது தேதியிலாவது அல்லது அதற்கு முன்பாகவாவது அட்வான்ஸாக செலுத்தப்படவேண்டியது. அப்படி செலுத்தத் தவறின துகைகளுக்கு அபருதம் போடப்படும். அந்தந்த மாதத் தொகையை அந்தந்த மாதத்தின் முடிவுக்குள் செலுத்தத் தவறினல் வட்டியும் வசூல் செய்யப்படும். மதராஸ் டவுனில் 25உக்குப் பிறகும் மற்ற இடங்களில் 20உக்குப் பிறகும் கிஸ்தி செலுத்தத் தவறின கடைகள் மறு எலம் போடப்படும். கள்ளுக்கடைகள் மரவரி செலுத்தத் தவறினதற்காகவும் மறு எலம் போடப்படலாம். டெப்போக்களுக்கு கட்டணம் முன்னதாகச் செலுத்தப்படவேண்டியது.

குறிப்பு.—மதருஸ் ஸிடியில் மரவரித் தவணைகள் எந்த மாதத்தில் செலுத்தப்படவேண்டுமோ அந்த மாதத்தில் 10-ஆம் தேதியிலாவது அல்லது அதற்கு முன்பாகவாவது செலுத்தப்படவேண்டும்.

25. குத்தகைத் துகையையாவது அல்லது திருநெல்வேலி ஜில்லாவிலும், ராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமனுதபுரம், முதுகொளத்தூர், பரமக்குடி தாலூகாக்களிலுமுள்ள கள்ளுக்கடைகளின் விஷயங்களில் கிஸ்தியல்லாமல் ஒவ்வொரு கடைக்கும் கொடுக்கப்படவேண்டியதாகவும் கொடுப்பதாக உடன்படிக்கைமேல் கடையைக் கொள்ளப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட துகையையாவது தள்ளிவிடவேண்டுமென்றுவது அதைக் குறைக்க வேண்டுமென்றுவது கேட்பதற்கு எவ்விதத்திலும் சுதந்தரமில்லை.

26. கிஸ்திகள் அல்லது மரவரி அல்லது, திருநெல்வேலி ஜில்லாவிலும், ராமனுதபுரத்தைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமனுதபுரம், முதுகொளத்தூர், பரமக்குடி தாலூகாக்களிலுமுள்ள கள்ளுக்கடைகளின் விஷயங்களில் ஒவ்வொரு கடைக்கும் கிஸ்தியல்லாமல் கொடுக்கப்படவேண்டியதாகவும், கொடுப்பதாக உடன்படிக்கைமேல் கடையைக் கொள்ளப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட துகைகளை கொடுக்கவேண்டிய தேதிகளில் கொடுக்கத் தவறுகிற விஷயத்தில் ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு லைஸென்ஸுகளை நிறுத்திவைக்க அதிகாரம் உண்டு. இந்த அதிகாரமானது சாராயம், கள்ளு, கஞ்சா, பீர் கடைகள், டாவரன்ஸ் விஷயங்களில் தாசில்தார்களாலும், இண்டிபெண்டெண்டு சார்ஜிலிருக்கும், டிப்டி தாசில்தார்களாலும் அபினிக் கடைகள் விஷயங்களில் டிவிஷனல் ஆபீஸர்களாலும் மற்ற லைஸென்ஸுகள் விஷயங்களில் கலெக்டரவர்களாலும் செலுத்தப்படும். குத்தகை பாக்கி கொடுக்கத் தவறினதற்காக லைஸென்ஸு நிறுத்திவைக்கப்பட்டால், புது குத்தகைதாரனுக்கு லைஸென்ஸு பிறக்கும் தேதி முதல் செலாவணியாய் வரும்படி விற்பனை சுதந்தரமானது மறு எலத்தில் விற்கப்படும் அல்லது கலெக்டரவர்களு

டைய யுக்தப்படி வேறுவிதமான ஏற்பாடு செய்யப்படும். மறுயேலமின்றி வேறுவிதமான விநியோகமென்பது கடை அல்லது டாவரன்கள் மூடுவதும் உள்பட்டதாகும். நிறுத்திவைப்பதனுலும் மறுயேலம் அல்லது வேறுவிதமான ஏற்பாடு செய்வதனுலும் உண்டாகும் எல்லா நஷ்டங்களும் பாக்கிதாரனுல் கொடுக்கப்படவேண்டியது. ஷ நஷ்டங்கள் மறுயேலம் அல்லது வேறு விநியோகம் செய்யப்பட்டவுடனே பாக்கியாய்விடும். லாபம் ஏதாவது வந்தால் பாக்கிதாரனுக்கு அதில் யாதொரு பாத்தியமும் இல்லை. குத்தகையின் ஆரம்பத்தில் வைக்கப்பட்டிருக்கிற டிபாசிட்டு தொகை ஏதாவது இருந்தால் அது முழுமையும் சர்க்கார் தாக்கல் செய்யப்படும். லைசென்ஸை நிறுத்திவைக்க அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர் யுக்தப்படி சுதந்தரத்தை மறுயேலம் அல்லது வேறே ஏற்பாடு செய்கிறவரையில் விற்பனை செய்ய உத்தரவு பண்ணலாம்.

27. (a) காண்ட்ராக்ட் டிஸ்டில்லெரி ஸப்ளை முறைப்படி ஸப்ளை செய்பவர் விஷயத்தில் ரெவின்யு போர்டார் அவர்களுடையவும், ஸர்பரா அல்லது விற்பனை சுதந்திரம் விஷயத்தில் கலெக்டர் அவர்களுடையவும், முன் உத்தரவன்றி விற்கவாவது, வேறொருவர்பேருக்கு மாற்றவாவது, உள் குத்தகைக்கு விடவாவது கூடாது. கலெக்டர் அப்படி உத்திரவு செய்யும்பட்சத்தில் அவருடைய அங்கீகாரம் பெறுவதற்கு முன் எவனையும் சுதந்தரத்தை நிர்வகிப்பதற்கு ஏஜெண்டாக நியமித்துக்கொள்ளக்கூடாது.

(b) மாற்றப்பட்டவருக்கு லைசென்ஸு கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து சுதந்தரத்தின் மாற்றல் கணக்காகும்.

28. (a) இண்டியன் ஸ்டேட் அல்லது அன்னிய தேசத்துப் பிரதேசங்களில் உள்ள எந்த அப்காரி அல்லது அபினி லைசென்ஸ்தாரனும் ப்ரிடிஷ் பிரதேசத்தில் அதே மாதிரி வஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸில் கலெக்டருடைய விசேஷ உத்திரவில்லாமல் ஒரு விதமான பாத்தியதையும் வைத்துக்கொள்ளக்கூடாது.

(b) கலெக்டருடைய விசேஷ உத்திரவில்லாமல் பிரிடிஷ் பிரதேசத்தில் ஓரிடத்திலிருக்கும் எந்த அப்காரி அல்லது அபினி லைசென்ஸுதாரனும் குறைந்த அல்லது அதிகமான தீர்வையுள்ள பிரிடிஷ் பிரதேசத்திலேயே மற்றொரு இடத்தில் அதே வஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட லைசென்ஸில் யாதொரு பாத்தியதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட லைசென்ஸு பெற்றுக்கொள்ளவுங்கூடாது. கலெக்டருடைய விசேஷ உத்திரவு வேண்டுவோர் தாமதமில்லாமல் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது. இந்த நிபந்தனையை மீறி நடக்கும் லைசென்ஸ்தாரன் தான் வைத்துக்கொண்டிருக்கும் எல்லா லைசென்ஸுகள் விஷயத்திலும் நெ. 37-ம் நிபந்தனையில் காணப்பட்ட தண்டனைக்குள்ளாவான்.

29. லைசென்ஸுதாரர்கள் டிவிஷனல் ஆபீஸரவர்களால் அப்போதைக்கப்போது கேட்கப்படும் கணக்குகளையும் சங்கதிகளையும் கொடுத்துக்கொண்டு வரவேண்டியது.

30. மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உண்டுபண்ணுவதற்காவது கொண்டுபோவதற்காவது விற்பதற்காவது லைசென்ஸுதாரர்கள் வேலையில் வைத்துக்கொண்டிருக்கிறவர் எவர்களாகிலும் அப்காரி/அபினி சட்ட திட்டங்களை மீறி நடந்திருப்பதாக லைசென்ஸுதாரர்களுக்குத் தெரியவந்தால், லைசென்ஸுதாரர்கள் அதை டிவிஷனல் ஆபீஸருக்கு தெரியப்படுத்தவேண்டியதுமல்லாமல் அப்படிப்பட்டவர்களை வேலையில் இன்னும் வைத்துக்கொண்டிருப்பதைக்குறித்து டிவிஷனல் ஆபிஸர் என்ன உத்திரவு செய்கிருரோ அந்தப்படி நடந்துக்கொள்ளவும் வேண்டியது.

31. லைசென்ஸுதரர்கள் லாண்டு ரெவினியூ அல்லது எக்ஸைஸ் இலாகா உத்தியோகஸ்தரிடத்தில் பண விஷயமான எவ்வித லேவாதேவியும் வைத்துக்கொள்ளக்கூடாது.

32. கலெக்டருக்கு யுக்தமாகத் தோன்றினல் ரெவினியுபோர்டாருடைய அனுமதியின்மேல் பதினைந்து நாளுக்கு முன்பாகவே லைசென்ஸுதாரனுக்கு நோட்டிஸ் கொடுத்து எந்த லைசென்ஸையும் ரத்து செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அவ்வாறு நடக்கும் விஷயத்தில் லைசென்ஸுதாரன் செலுத்தியிருக்கிற கட்டணத்தில் தாமாஷா வீதப்படி ஏற்படுகிற அளவுக்கு அவனுக்குத் தொகை வாபிஸ் செய்துவிடப்படும்.

33. எல்லா லைசென்ஸுதாரர்களும் ஆப்காரி/அபினி சட்டதிட்டங்களின்கீழ் சேர்க்கையாக பின்னும் ஏதாவது விதிகள் நிர்ணயிக்கப்பட்டால் அவைகளுக்கு உள்ளாகவேண்டியதுமல்லாமல் கலெக்டராவது அவரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது லைசென்ஸைக் கொடுத்துவிடச் சொல்லி உத்தரவு செய்யும்பட்சத்தில், அப்பிரகாரமே அதில் திருத்துப்பாடு செய்யும்பொருட்டாகிலும் வேறே லைசென்ஸு பிறப்பிக்கப்படும் பொருட்டாகிலும் தன்னுடைய லைசென்ஸுகளைக் கொடுத்துவிடவேண்டியது.

34 லைசென்ஸு பெற்ற கடைகளையும் டெப்போக்களையும் பார்வையிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர்கள்—

(1) ரெவினியூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் கீழ்படாத யாதொரு ரெவினியூ உத்தியோகஸ்தரும்,

(2) சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் கீழ்படாத யாதொரு எக்ஸைஸ் உத்தியோகஸ்தரும்.

இந்த உத்தியோகஸ்தர்கள் உள்ளேபோகவும் பரிசோதனை செய்யவும் வழங்கிக்கொண்டிருக்கிற நிறைகளையும் அளவைக் கருவிகளையும் லைசென்ஸுதாரர்கள் சுவாதீனத்திலிருக்கும் மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களையும் பரிசோதனை செய்யும் கடை அல்லது டெப்போவில் வைக்கப்பட்டிருக்கும் கணக்குகளை வரவழைக்கவும் சோதிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிருர்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய அலுவலில் சம்பந்தப்படுங்கால் பார்வையிடலாம்.

35. டெப்போ அல்லது ஷாப்புகளை பரிசோதனை பண்ண அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் யாவரும், சாப்பிடுகிறதற்கு அல்லது உபயோகிப்பதற்கு உதவாதென்று காணப்பட்ட அல்லது மேலே 12-வது நிபந்தனையில்கண்டபடி எவ்விதத்திலாவது கலப்பிடப்பட்டதென்று தோற்றப்படுகிற மது, அபினி, அல்லது கஞ்சா முதலிய லாகிரிவ்ஸ்துக்களை நிறுத்தலாம். கலெக்டர்களும் எக்ஸைஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த அஸிஸ்டெண்டு கம்மிஷனர்களும் சாப்பிடுவதற்கு அல்லது உபயோகப்படுத்துவதற்கு உதவாதென்று காணப்படுகிறவாவது அல்லது கலப்பிடப்பட்ட எவ்விதமான மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களையும், வேறுவிதமான மதுவுடன் கலக்கப்பட்டு ஒன்றின் பெயரிட்டு விலைக்கு விற்கப்படுகிற எல்லாவித மதுவையும் பரிமுதல் செய்யவாவது அழித்துவிடவாவது அதிகாரம் பெற்றிருக்கிருர்கள்.

36. பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் அபிப்பிராயத்தை குறிக்க வேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்ட [ஜீ. 10] பரிசோதனு புஸ்தகம் ஒன்று வைத்திருக்கவேண்டியது. அந்த புஸ்தகத்தை சர்க்கில் இன்ஸ்பெக்டரிடமாவது அவரால் நியமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடமாவது அதற்காக ஒரு ரசீது கொடுத்தபோது கொடுத்துவிடவேண்டியது. இந்த புஸ்தகம் சர்க்காரை சேரவேண்டியது. இந்த புஸ்தகத்தை பின்னமில்லாமல் நியாயப்படி சுத்தமான ஸ்திதியில் இஜாரா முடிந்த பிறகு அந்த ரேஞ்சு சப்-இன்ஸ்பெக்டரிடமாவது அல்லது புதிய இஜாராதாரிடமாவது அதற்காக ஒரு ரசீது கொடுத்தபோது திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது.

37. (1) லைசென்ஸுதாரன் அல்லது அவனுல் நியமிக்கப்பட்ட எவனுவது அப்காரி, அபினி ஆக்டின் விரோதமாகவாவது அல்லது இந்தியன் பினல்கோட்

சட்டத்தின் கீழாவது ஏதாவதொரு குற்றம் செய்ததாய் தகுந்த கோர்ட்டினுல் தண்டிக்கப்பட்டு, அவன் செய்த குற்றத்தினுல் லைஸென்ஸை ரத்து செய்வது யுக்தமென்று கலெக்டர் அபிப்பிராயப்பட்டாலும் அல்லது லைஸென்ஸுதாரன் மேலே சொல்லப்பட்ட ஏதாவதொரு குற்றத்திற்காக தகுந்த கோர்ட்டினுல் லைஸென்ஸு கொடுப்பதற்கு முன்பே தண்டிக்கப்பட்டதாக கலெக்டருக்குத் தெரிவிக்கப்படும் பட்சத்தில் லைஸென்ஸை ரத்து செய்யவும், மேலும், சுதந்திரத்தை மறுயேலம் போடவும் அல்லது வேறுவிதமான ஏற்பாடு செய்யவும் கலெக்டர் உத்தரவு செய்யலாம். அதனுலுண்டாகிய சகல நஷ்டத்திற்கும் லைஸென்ஸுதாரன் பாத்தியப்பட்டவனுவான். தவிர கலெக்டருக்கு அவசியமென்று தோன்றினுல் லைஸென்ஸுதாரன் கட்டியிருக்கும் டேவணி தொகைகளை சர்க்கார் தாக்கல் செய்யலாம்.

(2) லைஸென்ஸுதாரனுவது அல்லது அவனுல் நியமிக்கப்பட்ட எந்த மனுஷ்யனுவது லைஸென்ஸின் எந்த நிபந்தனையையேனும் மீறி நடக்கும்பட்சத்தில் பிராஸிகூஷனுக்கு பாத்திரனுகி தண்டிக்கப்பட்டால் 1-வது ஷரத்தின்படி நடத்தப்படுவான். அல்லது ரூ. 50-க்கு அதிகப்படாமல் அபராதத்திற்காவது அல்லது அவன் லைஸென்ஸை ரத்து செய்து சுதந்திரத்தை மறுயேலம்போடுவது அல்லது வேறே ஏற்பாடு செய்வது அதனுலுண்டாகும் சகல நஷ்டத்திற்கும் லைஸென்ஸுதாரன் பாத்தியப்படவேண்டுவதும் தவிர கலெக்டருக்கு அவசியமென்று தோன்றினுல் டிபாஸிட்டையும் சர்க்கார் தாக்கல் செய்வதற்கு உட்படுவான். இந்த நிபந்தனை அல்லது இதற்கு முந்தி சொல்லப்பட்ட நிபந்தனைப்படி குத்தகை ரத்துசெய்துவிட்டால் குத்தகை முழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகை தொகையானது, திருநெல்வேலி ஜில்லாவிலும், ராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமனுதபுரம், முதுகொளத்தூர், பரமக்குடி தாலூக்காக்களிலுமுள்ள கள்ளுக்கடைகளின் விஷயங்களில், இஸ்தியல்லாமல் ஒவ்வொரு கடைக்கும் கொடுக்கப்படவேண்டியதும் கொடுப்பதாக உடன்படிக்கைமேல் கடையைக் கொள்ளப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட துகையும்கூட உடனே பாக்கியாய்விடும்.

(3) யாதொரு லைஸென்ஸுதாரன் ஆப்காரி அல்லது அபினி ஆக்டின்கீழ் கொடுக்கப்பட்ட லைசென்ஸுகளில் ஒன்றுக்குமேல் பெற்றிருந்தால் அந்த லைஸென்ஸ்களில் ஏதாவது ஒன்று மேலே சொன்ன (1) அல்லது (2)-வது கிளாஸின்படியாவது அல்லது கஞ்சா அல்லது அபினிக்கடை லைஸென்ஸுகளுக்குறிய ஸ்பெஷல் நிபந்தனைகளின்படியாவது ரத்து செய்யப்பட்டால் கலெக்டர் அவர்களின் யுக்தப்படி அந்த லைஸென்ஸுதாரனுல் வகிக்கப்பட்ட ஆப்காரி அபினி ஆக்டின்படியுள்ள மற்ற லைஸென்ஸுகளில் ஏதாவது ஒன்றையாவது அல்லது எல்லாவற்றையுமாவது ரத்து செய்யவும், மேலும், அந்த லைஸென்ஸுதாரன் வகித்திருக்கும் எல்லா சுதந்தரங்களையும் மறுயேலம்போடவும் அல்லது வேறுவிதமான ஏற்பாடு செய்யவும் உத்தரவு செய்யலாம். அதனுலுண்டாகிய சகல நஷ்டத்திற்கும் லைஸென்ஸுதாரன் பாத்தியப்படுவதும் தவிர கலெக்டருக்கு அவசியமென்று தோன்றினுல் லைஸென்ஸுதாரன் கட்டியிருக்கும் டேவணி தொகைகளை சர்க்கார் தாக்கல் செய்யலாம். இந்த நிபந்தனைப்படி குத்தகை ரத்து செய்யப்பட்டால் குத்தகை முழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையானது, திருநெல்வேலி ஜில்லாவிலும், ராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமனுதபுரம், முதுகொளத்தூர், பரமக்குடி தாலூகாக்களிலுமுள்ள கள்ளுக்கடைகளின் விஷயங்களில், கிஸ்தியல்லாமல் ஒவ்வொரு கடைக்கும் கொடுக்கப்படவேண்டியதும் கொடுப்பதாக உடன்படிக்கை மேல்கடையைக் கொள்ளப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட துகையும் கூட உடனே பாக்கியாய்விடும்.

குறிப்பு.—லைஸென்ஸின் இடைவிடாத தவறுதலுக்கு இடைவிடாத அபராதம் விதிக்கப்படும்.

38. லைஸென்ஸுதாரனுல் கொடுக்கப்படவேண்டிய எந்த தொகையும் குத்தகை டிபாசிட்டு ஏதாவது வைத்திருந்தால் அதிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் அல்லது ரிவினியூ ரிகவரி ஆக்டின்படி லாண்ட் ரிவினியூ பாக்கியைப்போல் வசூல் செய்யலாம். டிபாசிட்டிலிருந்து ஏதாவது தொகைகளைக் கழித்து எடுத்துக்கொள்ளும்பட்சத்தில் தாசில்தார் அல்லது இனடிபெண்டென்ட் சார்ஜில் இருக்கும் டிப்டி தாசில்தார் அனுப்புகிற நோடிஸை பெற்றுக்கொள்ளுகிற தேதிமுதல் பதினைந்து தினத்திற்குள் அந்த தொகைகளை கட்டிவிடவேண்டியது.

39. லைஸென்ஸுதாரன் பாக்கியாயிருக்கிற எல்லாத் தொகைகளுக்கும் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 6 விழுக்காடு வட்டி செலுத்தவேண்டுயது.

40. மற்ற கடைகளின் ஜாகாக்களையும் அல்லது எல்லைகளையும் கலக்காமல் நிர்ணயிக்கப்பட்ட ஜாகாக்களும் குறிப்பிட்ட எல்லைகளும் ஒவ்வொரு கடைக்கும் விற்பனைக்குமுன் டிஸ்ட்ரிக்ட கெஜெட்டில் பிரசுரிக்கப்படும். தாசில்தார், விற்பனை நோடிஸில் கடைக்காக ஏற்படுத்திய எல்லைக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எந்த சமயத்திலாவது அதை மாற்ற உத்தரவு அளிக்கலாம் அல்லது உத்திரவு செய்யலாம். ரெவினியுபோர்டாருடைய பிரத்தியேகமான உத்தரவில்லாமல் கடைகள், டெப்போக்கள் இவைகளின் சங்கியையிலாவது, ஸ்தாபிக்குமிடங்களிலாவது ஒரு குத்தகை காலத்தில் சமீபத்திலேயிருக்கிற கடைக்காரர்களின் நன்மைக்கு விரோதமான மாறுதல்கள் செய்யக்கூடாது.

41 எவைகளுக்கருகாமையில் கிரமமாய் லைஸென்ஸு பெற்ற கடைகள் இல்லையோ அந்த இடங்களில் சந்தை, திருவிழா முதலியவை நடக்குங் காலத்தில் மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்பனை செய்வதற்காக “காலாகாலத்து லைஸென்ஸுகள்” கொடுக்கும் சுதந்திரம் கலெக்டர் தாமே உடையவராயிருக்கிறுர். இவ்வித லைஸென்ஸுகள் கண்டிப்பாய் அத்தியாவசியமாயிருக்கும்போதுதான் கொடுக்கப்படும். அந்த ஜாகாவில் எந்த கடைக்காரர்கள் சப்ளை செய்கிறுர்களோ அவர்களுக்கு அல்லது இஜாரா கொடுக்கும் இடத்தின் இஜாராதாரருடைய பிரதிநிதிகளுக்கு அந்த லைஸென்ஸுகள் சாதாரணமாய் கொடுக்கப்படும். பத்து நாளைக்கு அதிகப்படாமல் வேண்டிய தினங்களுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்படும். ரெவினியு போர்டாருடைய உத்தரவன்றி எந்த சந்தை அல்லது திருவிழாவுக்கும் ஒரு லைஸென்ஸுக்குமேல் கொடுக்கக்கூடாது. லைஸென்ஸுகளுக்காக கொடுக்கப்படவேண்டிய கட்டணம் கலெக்டரவர்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி நிர்ணயிக்கப்படும்.

## நாட்டுச் சாராய லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்.

1. இந்த சுதந்திரமானது நாட்டுச் சாராயத்தை விற்கத்தான் சம்பந்தப்படும். நாட்டுச்சாராயம் விற்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட காரங்கள் என்னவென்றுல் அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களில் 25 டிக்ரி குறைந்காரம், தென் ஆற்காடு ஜில்லாவில் சேர்ந்த பிரஞ்சு மாகாணத்திற்கு அடுத்த டிராக்டுகளில் 35 டிக்ரிகுறைந்த காரம், பால்கொண்டா ஏஜென்ஸியிலும் அனந்தகிரி ஏஜென்ஸியைச் சேர்ந்த கோட்டூர் உள்பட காசிபுரம் முட்டாவிலும், கீழ் கோதாவரி ஏஜென்ஸியைச் சேர்ந்த போலவரம், சோடவரம் யெல்லாவரம் தாலூகாக்களிலும் 60 டிக்ரி குறைந்த காரம் மற்ற இடங்களில் 35 டிக்ரி குறைந்த காரம், 60 டிக்ரி குறைந்த காரம். தென் கன்னடம் ஜில்லாவின் சில பாகங்களில் விற்பதற்காக ஏற்படுத்தப்பட்ட முந்திரிச் சாராயத்தின் நிர்ணயிக்கப்பட்ட காரம் 35 டிக்ரி குறைந்த காரம். விசாகப்பட்டணம் ஜில்லா, சிகாகோல் சர்க்கிளில் விற்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இப்பா சாராயத்தின் நிர்ணயிக்கப்பட்ட காரம் 60 டிக்ரி குறைந்த காரம். ஒரு டிஸ்

டிஸ்டிலெரி அல்லது வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும் சாராயம் நிர்ணயிக்கப்பட்ட காரங்களுக்கு 1 டிகிரி வரையில் அதிகமாகவாவது குறைவாகவாவது இருக்கலாம். லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களில் ஒரு டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும் காரமுள்ள சாரயம் தவிர வேறு காரமுள்ள சாராயத்தை லைஸென்ஸுதாரனாவது, அவனுடைய வேலைக்காரனாவது அல்லது அவனுக்காக நடவடிக்கைகள் நடத்துகிறவனாவது வைத்துக்கொள்ளவும்கூடாது. விற்கவும் கூடாது.

2. ஒவ்வொரு ஜில்லாவிற்காக காண்ட்ராக்ட் சப்ளைதாரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸ்களிலிருந்து அல்லது காண்ட்ராக்ட் சப்ளைக்காரர் அல்லது அவர்களுடைய அனுமதியின்மேல் ப்ரைவேட் மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட மொத்த விற்பனை டெப்போக்களிலிருந்தும் சாராயத்தை கிரயத்துக்குக் கொள்ளலாம். ஆனால், எந்த காலத்திலேயேயாவது எந்த கடைக்காரனையாவது அதே ஜில்லாவிலுள்ள குறிப்பிட்ட டெப்போ அல்லது டெப்போக்களிலிருந்துதான் சாராயத்தை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கலெக்டர் யுக்தப்படி உத்திரவு செய்யலாம்; ஆனால் ஷை கடைக்காரன் நேராக டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸிலிருந்து சாராயம் வாங்கும் சுதந்திரத்தைத் தடுக்காது. பலவித ஜில்லாக்களிலுள்ள டிஸ்டில்லெரிகள், வேர் அவுஸ்கள் அல்லது ஒல்சேல் டெப்போக்களில் காலன் ஒன்றுக்கு சார்ஜ் செய்யப்படும் கிரயங்கள் அடியிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

| ஜில்லா. | சப்ளை உற்பத்தி ஸ்தானம், டிஸ்டில்லெரி, வேர் அவுஸ் அல்லது ஒல்சேல் டெப்போ. | சாராய தினுசு. | 35° குறைந்த காரமுள்ளது. | 60° குறைந்த காரமுள்ளது. |
|---|---|---|---|---|
| | | | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1. (a) விசாகப்பட்டணம்— | | | | |
| சிகாகோல், தெக்கலி, இச்சாபூர், ஸொம்பீடா, பாடபட்ணம் தாலூக்காக்கள். | தும்மபாலா டிஸ்டிலரி .. .. | பாகு சாராயம். | 1 13 6 | 1 3 6 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை | 1 13 6 | 1 3 6 |
| 2 விசாகப்பட்டணம் (சாதாரண டிராக்டுகளும் ஏஜென்ஸி டிராக்டுகளின் 137 கிராமங்களும்) நெ. 1-ல் கூறிய இடங்கள் தவிர. | விசாகப்பட்டணம் டிஸ்டில்லெரி .. | வெல்ல சாராயம். | 1 8 0 | 0 14 9 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 13 6 | 1 4 3 |
| அனந்தகிரி ஏஜென்ஸியைச் சேர்ந்த கோட்டூர் உள்பட காசிபுரம் முட்டா. † பால்கொண்டா ஏஜென்ஸி .. | ஷை .. .. | ஷை .. | .. | 1 4 3 |
| 3 †கீழ் கோதாவரி ஏஜென்ஸி (போலவரம் தாலூகாவில் 20 கிராமங்கள் தவிர மீதி பாகம், யெல்லாவரம், சோடாவரம்). | சாமல்கோட் டிஸ்டில்லெரி .. .. | பாகு சாராயம் .. | .. | 0 11 1 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | .. | 1 4 1 |
| 4 கீழ் கோதாவரி .. .. .. | சாமல்கோட் டிஸ்டில்லெரி .. .. | ஷை .. | 1 2 0 | 0 11 1 |
| | நிடடவோல் வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 6 | 0 12 7 |
| | சாமல்கோட் டிஸ்டில்லெரியிலிருந்து சப்ளை செய்யப்பட்ட ஒல்சேல் டெப்போ. | ஷை .. | 1 6 6 | 0 15 7 |
| மேல் கோதாவரி .. .. .. | நிடடவோல் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்பட்ட ஒல்சேல் டெப்போ. | ஷை .. | 1 9 0 | 1 1 1 |
| 5 கிருஷ்ணா— | | | | |
| குடிவாடா, கெயிகலுரு, நஸ்விட், கண்ணுவரம் தாலூகாகள். | நிடடவோல் வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 6 | 0 12 7 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 1 |
| †ஜில்லா மீதி பாகத்திற்கு .. .. | பெஸ்வாடா வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 6 | 0 12 7 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 1 |
| 6 குண்டூர்— | | | | |
| குண்டூர், நரசராவ்பேட், சத்தனப்பள்ளி, பாலநாட், வினுகொண்டா தாலூகாவிற்கு. | பெஸ்வாடா வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 6 | 0 12 7 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 1 |
| ‡தெனாலி, ரேபலி, பாபட்லா, ஒங்கோல் தாலூகாவிற்கு. | பெஸ்வாடா வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 6 | 0 12 7 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 1 |
| 7 நெல்லூர் .. .. .. .. | நெல்லூர் வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 5 0 | 0 12 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 12 0 | 1 3 11 |
| 8 கடப்பை .. .. .. .. | கடப்பை வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 5 0 | 0 12 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 11 0 | 1 2 11 |
| 9 அனந்தபூர்— | | | | |
| கதிரி தாலூகா .. .. .. | கடப்பை வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 5 0 | 0 12 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 12 0 | 1 3 11 |
| ஜில்லா மீதி பாகத்திற்கு .. .. | தாட்பத்திரி டிஸ்டில்லெரி .. .. | வெல்ல சாராயம். | 1 8 0 | 0 14 9 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 15 0 | 1 5 9 |
| 10 பல்லாரி .. .. .. .. | பல்லாரி டிஸ்டில்லெரி .. .. .. | ஷை | 1 9 0 | 0 15 5 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை | 2 0 9 | 1 7 2 |
| 11 கர்னூல் (பங்கனபல்லி ராஜ்ஜியம் உள்பட). | நந்தியால் வேர் அவுஸ் .. .. | ஷை | 1 11 6 | 1 0 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை | 2 1 6 | 1 6 11 |
| 12 மதராஸ் டவுன் சர்க்கில் .. .. | மதராஸ் வேர் அவுஸ் .. .. .. | ஷை | 1 9 6 | 0 15 8 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை | 1 14 0 | 1 4 2 |
| 13†§ செங்கல்பட்டு (சைதாப்பேட்டை தாலூகா தவிர). | ஒல்சேல் டெப்போ .. .. .. | பாகு சாராயம் .. | 1 6 3 | 0 15 9 |

(a) விசாகப்பட்டணம் ஜில்லா, சிகாகோல் சர்கிளுக்கு சப்ளை செய்யப்படும் இப்பா சாராயம் 60 டிகிரி குறைந்த காரமுள்ளதாயிருக்க வேண்டும். இந்த சர்க்கிளிலுள்ள கடைகளுக்கு சப்ளை செய்யப்படும் இப்பா சாராயம் அதற்காக அந்த சர்க்கிளில் ஏற்படுத்தப்பட்ட டெப்போக்களிலிருந்துதான். இந்த சாரயத்தின் விலை, டியூடி தவிர 60 டிகிரி குறைந்த காரமுள்ள காலன் ஒன்றுக்கு டிப்போக்களில் ரூ. 0–14–0. இந்த சாராயத்தை கடைகளில் திராம் ஒன்றுக்கு 6 பைசா (½ அணா) விற்குமேல் விற்கக்கூடாது.

† சைதாப்பேட்டை தாலூகா தவிர செங்கல்பட்டு ஜில்லாவுக்கும், முனகாலா, லிங்கிரி ஜமீன்களுக்கும், பால்கொண்டா ஏஜென்ஸிக்கும், விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள அனந்தகிரி ஏஜென்ஸியைச் சேர்ந்த கோட்டூர் உள்பட காசிபுரம் மூட்டாவுக்கும், கீழ் கோதாவரி ஏஜென்ஸியில் போலவரம், சோடாவரம், யெல்லாவரம் தாலூகாக்களுக்கும் நீலகிரி ஜில்லாவுக்கும் சப்ளை செய்யப்படும் சாராயத்திற்கு வர்ணம் கொடுக்கப்படும்.

‡ தெனாலி, ரேபல்லி, செருகுபல்லி, பாபட்லா, பரசூர் இந்த இடங்களில் தவிர மற்ற இடங்களிலிருக்கிற ஒல்சேல் டெப்போக்களுக்கு நெல்லூர் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும்.

§ செங்கல்பட்டு ஜில்லாவிலிருக்கும் (சைதாப்பேட்டை தாலூகா தவிர) டெப்போக்களுக்கு நெல்லிகுப்பம் டிஸ்டில்லெரியிலிருந்து 35 டிகிரி குறைந்த காரமுள்ள சாரயத்திற்கு காலன் ஒன்றுக்கு ரூ. 1–1–0-ம், 60 டிகிரி குறைந்த காரமுள்ள சாராயத்திற்கு ரூ. 0–10–6-ம் செலுத்தி சரக்கு வரவழைத்துக்கொள்ளலாம்.

| ஜில்லா. | சப்ளை உற்பத்தி ஸ்தானம், டிஸ்டில்லெரி, வேர் அவுஸ் அல்லது ஒல்சேல் டெப்போ. | சாராய தினுசு. | 35° குறைந்த காரமுள்ளது. | 60° குறைந்த காரமுள்ளது. |
|---|---|---|---|---|
| | | | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 14 சித்தூர்— | | | | |
| மதனபல்லி, வாயல்பாடு தாலூகாக்கள். | கடப்பை வேர் அவுஸ் .. .. .. | பாகு சாராயம் .. | 1 5 0 | 0 12 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 6 | 1 1 5 |
| ஜில்லா மீதி பாகத்தில் .. .. | இராணிப்பேட்டை வேர் அவுஸ் .. | ஷை .. | 1 4 0 | 0 12 4 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 8 6 | 1 0 10 |
| 15 வட ஆற்காடு— | | | | |
| (திருப்பத்தூர், திருவண்ணாமலை தாலூகாக்கள் தவிர). | இராணிப்பேட்டை வேர் அவுஸ் .. | ஷை .. | 1 4 0 | 0 12 4 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 8 9 | 1 1 1 |
| திருப்பத்தூர் தாலூகா .. | இராணிப்பேட்டை வேர் அவுஸ் .. | ஷை .. | 1 4 0 | 0 12 4 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 4 |
| திருவண்ணாமலை தாலூகா .. | நெல்லிகுப்பம் டிஸ்டில்லெரி .. .. | ஷை .. | 1 1 0 | 0 10 6 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 5 9 | 0 15 3 |
| 16 * தென் ஆற்காடு (உயர்ந்த தீர்வையுள்ள ஸ்தலங்கள்). | நெல்லிகுப்பம் டிஸ்டில்லெரி .. .. | ஷை .. | 1 1 0 | 0 10 6 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 5 9 | 0 15 3 |
| 17 தஞ்சாவூர் .. .. .. .. | தஞ்சாவூர் வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 3 | 0 12 6 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 3 |
| 18 † திருச்சினாப்பள்ளி .. .. .. | திருச்சினாப்பள்ளி வேர் அவுஸ் .. | ஷை .. | 1 4 3 | 0 12 6 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 9 0 | 1 1 3 |
| 19 மதுரை .. .. .. .. | மதுரை வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 3 7 | 0 12 1 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 8 1 | 1 0 7 |
| 20 இராமனாதபுரம் .. .. .. | மதுரை வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 3 7 | 0 12 1 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 8 1 | 1 0 7 |
| 21 (b) திருநெல்வேலி .. .. .. | தச்சநெல்லூர் டிஸ்டில்லெரி (நாடார்) .. | வெல்ல சாராயம். | 1 2 6 | 0 11 5 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 7 0 | 0 15 11 |
| 22 கோயம்புத்தூர் .. .. .. | கோயமுத்தூர் டிஸ்டில்லெரி .. .. | ஷை .. | 1 4 0 | 0 12 4 |
| | ஒல்சேல் டெப்போ. கொல்லிமலை தாலூகாவில் .. | ஷை .. | 1 10 0 | 1 2 4 |
| | ஒல்சேல் டெப்போ. ஜில்லா மீதி பாகத்தில் .. | ஷை .. | 1 8 6 | 1 0 10 |
| 23 நீலகிரி .. .. .. .. .. | கூனூர் வேர் அவுஸ் .. .. .. | ஷை .. | 1 10 0 | 1 0 0 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 14 6 | 1 4 6 |
| 24 ‡ தென்கன்னடம் .. .. .. | மங்களூர் வேர் அவுஸ் .. .. .. | பாகு சாராயம் .. | 1 6 6 | 0 13 11 |
| | ஒல்சேல் டெப்போ .. .. .. | ஷை .. | 1 12 0 | 1 3 5 |
| 25 மலையாளம் (வைநாடு தாலூகா தவிர). | ஒலவக்காடு வேர் அவுஸ் .. .. | ஷை .. | 1 4 3 | 0 12 6 |
| | ஒல்சேல் டெப்போ. பி. கொச்சின் .. .. | ஷை .. | 1 12 6 | 1 4 9 |
| | ஒல்சேல் டெப்போ. இதர டெப்போ .. .. | ஷை .. | 1 10 0 | 1 2 3 |
| 26 வைநாட் தாலூகா (மலையாளம்) .. | கான்ட்ராக்ட்தாரர்களுடைய ஒல்சேல் டெப்போக்கள் | .. | 2 3 6 | 1 5 11 |

3. டிஸ்டில்லெரிகளிலிருந்தும் வேர் அவுஸ்களிலிருந்தும், டெப்போக்களுக்கும் ஷாப்புகளுக்கும் ஸப்ளை செய்யப்படும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை டிஸ்டில்லருடைய அல்லது வேர் அவுஸ் கீப்பருடைய செலவில் டிஸ்டில்லெரி ஆபீஸரும் வேர் அவுஸ் ஆபீஸரும் ஸீல் செய்யவேண்டும். டெப்போக்களிலிருந்து ஷாப்புக்களுக்கு அனுப்பப்படும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை டெப்போக் கீப்பர் தன்னுடைய செலவில் கெட்டியாய் ஸீல் செய்யவேண்டும். சாராயக் கடைக்காரர்கள் ஒல்சேல் டெப்போக்களிலிருந்தும், டிஸ்டில்லெரிகளிலிருந்தும் வேர் அவுஸ்களிலிருந்தும் ஸப்ளை செய்யப்படும் சாராயத்தை கொண்டுபோக சரியாக மூடும்படியானதும் ஸீல் செய்யும்படி அனுகூலமாயுள்ளதுமான ஜாடி அல்லது மற்ற எந்த பாத்திரங்களையாவது வைத்துக்கொள்ளவேண்டியது. மேலே சொன்னபடி மூடும்படியானதும், ஸீல் செய்யத்தகுந்ததாயுமுள்ள பாத்திரங்களில்லாமற்போனால், டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸ் ஆபீஸர் அல்லது டெப்போ கீப்பர் சாராயம் சப்ளை செய்யக்கூடாது. கண்டிராக்ட்டு சப்ளைக்காரர்கள், மொத்த விற்பனை டெப்போ கீப்பர்கள் சரியான நாணய விலை கொடுத்ததின் பேரில் அவர்களிடத்திலிருந்து வாங்குகிறதற்கு லைஸென்ஸ் பெற்ற எல்லா மனிதர்களுக்கும் விற்கவேண்டியது. மொத்த விற்பனைக்காரர்களும் கடைகாரர்களும் எந்த தினுசு சாராயம் விற்க லைஸென்ஸ் பெற்றார்களோ அதே தினுசு சாராயத்தை எந்த நிர்ணயிக்கப்பட்ட காரத்திலும் மனு செய்துகொண்ட வரிசைக் கிரமமாய் மனுதாரர்களுக்கு தாமஸமின்றி டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும். கடைக்காரர்கள் அதே இடத்தில் ஒல் சேல் டெப்போ இருந்தபோதிலும் டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸிலிருந்து இரண்டாவது நிபந்தனையிலும் அதின் குறிப்பிலும் டேபிலிலும் சொல்லியிருக்கும் ஸப்ளை உற்பத்தி ஸ்தான விதிகளை அனுசரித்து சாராயம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட இண்டெண்டு புஸ்தகத்திலிருந்து, இண்டெண்டு கடைக்காரன் அனுப்பினதின்பேரில்தான் டெப்போக்கள், வேர் அவுஸ் அல்லது டிஸ்டில்லெரியிலிருந்து கடைகளுக்கு சாராயம் சப்ளை செய்யப்படும். ஷை இண்டெண்டு புஸ்தகம் தாலூகா ஆபீஸிலிருந்து விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டியது. டெப்போ, வேர் அவுஸ் அல்லது டிஸ்டில்லெரியிலிருந்து சாராயம் தேவையானபொழுதெல்லாம், கடைக்காரன் தானாவது அல்லது கடையில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைக்காரனாவது கிரமப்படி கையெழுத்துச் செய்த இண்டென்டினுடைய பாயில் பாகத்தை டெப்போ கீப்பர், வேர் அவுஸ்தார் அல்லது டிஸ்டில்லெரிக்கு அனுப்புவதோடுகூட, சரக்கு வந்த பிற்பாடு—தான் அனுப்பின இண்டென்டினுடைய கௌண்டர்பாயிலில் பர்மிட்டை ஒட்டவேண்டியது. அதே மாதிரி டெப்போ கீப்பர் தன்னால் அனுப்பப்பட்ட பர்மிட்டின் கௌண்டர்பாயிலில் இண்டென்டினுடைய பாயில் பாகத்தை ஒட்டி வைக்கவேண்டியது. டெப்போ கீப்பர் டிரான்ஸ்போர்டர் (எழுதத் தெரியாதவனாயிருந்தால்) அவனுடைய விரல் முத்திரையையும் அல்லது கையெழுத்தையாவது பர்

* இந்த ஜில்லாவில் ப்ராண்டியர் ட்ராக்டுகளுக்கு சப்ளை செய்யப்படும் சாராயம் வர்ணம் கொடுக்கப்படும். 35 டிக்ரி குறைந்த காரமுள்ளதாயுமிருக்கவேண்டும். நெல்லிகுப்பம் டிஸ்டில்லெரியிலிருந்து ஷை ப்ராண்டியர் ட்ராக்டுகளிலுள்ள ஒல்சேல் டெப்போக்களுக்கு சப்ளை செய்யப்பட்ட சாராயமும், ஷை டெப்போக்களிலிருந்து கடைகளுக்கு சப்ளை செய்யப்பட்ட சாராயமும் 35 டிக்ரி குறைந்த காரமுள்ளதாயும் விற்கும். விலை முறையே காலன் 1-க்கு ரூ. 1–1–0-ம், ரூ. 1–5–9-ம். இந்த டிராக்டுகளில் கடைகளுக்கு சப்ளை செய்யப்படும் சாராயம் ஒல்சேல் டெப்போக்களிலிருந்துதான்.

† ஜெயங்கொண்டசோழபுரம் டெப்போ தஞ்சாவூர் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும்.

‡ தென்கன்னடம் ஜில்லாவில் சில பாகங்களில் விற்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் முந்திரி சாராயம் 35 டிக்ரி குறைந்த காரமுள்ளதாயிருக்கவேண்டும். அந்தச் சாரயத்தின் விலை, டியூட்டியைத் தவிர்த்து 35 டிக்ரி குறைந்த காரமுள்ள காலன் ஒன்றுக்கு மங்களூர் வேர் அவுசில் ரூ. 1–13–9, மங்களூர் டவுன், மங்களூர் தாலூகாவிலும் உடுப்பி கேஸரகாட் சர்க்கிள்களிலும் உள்ள டெப்போக்களில் ரூ. 2–3–3.

(b) அஞ்சங்கோ, தங்கச்சேரி கிராமங்களிலுள்ள கடைகளுக்கு தங்கசேரியிலுள்ள டெப்போவிலிருந்து 25 டிக்ரி குறைந்த காரமுள்ள வெல்ல சாராயம் சப்ளை செய்யப்படும். அந்த சாராயத்தின் விலை டியூடி தவிர டெப்போவில் 25 டிக்ரி குறைந்த காரமுள்ள காலன் ஒன்றுக்கு ரூ. 1–9–10.

மிட்டு கௌண்டர்பாயிலில் வாங்கவேண்டியது. பிந்தி உபயோகப்படுத்துவதற்காக விவரப் பதிப்புகளில்லாத இண்டென்டுகளில் கையெழுத்து போட்டுவைக்கக் கூடாது.

4. ஒரு தடவையில் வாங்கும் அளவுகள் கீழே சொல்லிய குறைந்த அளவுக்குக்கீழே போகக் கூடாது.

| வாங்கும் மனிதர்கள். | டிஸ்டில்லெரி அல்லது வேர்அவுஸிலிருந்து. | மொத்த விற்பனை டெப்போக்களிலிருந்து. |
|---|---|---|
| (a) டிஸ்டில்லெரி அல்லது வேர்அவுஸிலிருந்து ஐந்து மைல் தூரத்துக்குள்ளிருக்கும் சுயாதீனக் கடைக்காரர்கள், தங்கள் கடைகளிலிருந்து ஐந்து மைல்களுக்குள் டெப்போ இல்லாதபொழுது. | ஐந்து காலன் .. .. | அரை காலன். |
| (b) இதர கடைக்காரர்கள் .. .. .. .. .. .. .. | இருபத்தைந்து காலன் .. | அரை காலன். |
| மொத்த விற்பனை டெப்போ கீப்பர்கள் .. .. .. .. .. .. | ஒன்பது காலன் .. .. | ஒன்பது காலன். |

5. டிஸ்டிலர்களினாலேயும் வேர்அவுஸ்தாரர்களினாலேயும் சார்ஜ் பண்ணப்படும் விலைகளானது காலன் ஒன்றுக்கு கீழே காட்டியபடி சர்க்காரால் விதிக்கப்பட்டிருக்கிற எக்ஸைஸ் டேடியை தவிரதான் :—

| ஜில்லாக்கள். (1) | 35° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு. (2) | 60° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு. (3) | 25° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு. (4) |
|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 1 விசாகப்பட்டணம், கீழ் கோதாவரி, மேல் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், மதராஸ், செங்கல்பட்டு ஜில்லாக்களில். | 5 3 2 | 2 15 2 | |
| 2 இதர ஜில்லாக்களில் (பிரத்தியேகமான டிராக்டுகள் தவிர) .. .. | 4 3 7 | 2 5 7 | .. |
| 3 கிருஷ்ணா ஜில்லாவில், முனகலா, லிங்ககிரி ஜமீன்கள் .. .. | 4 3 7 | 2 5 7 | .. |
| 4 தென் ஆற்காடு ஜில்லா (புதுச்சேரிக்கருகாமையிலிருக்கிற டிராக்டுகள்). | 3 12 0 | .. | .. |
| 5 பால்கொண்டா ஏஜென்ஸி, விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள அனந்தகிரி ஏஜென்ஸியைச் சேர்ந்த கோட்டூர் உள்பட காசிபுரம் முட்டா. | .. | 0 4 6 | .. |
| 6 கீழ் கோதாவரி ஏஜென்ஸியில் போலவரம், சோடவரம், யெல்லவரம் தாலூக்காக்களிலுள்ள எக்ஸைஸ் டிராக்டுகள். | .. | 0 15 0 | .. |
| 7 அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களில் .. .. .. .. .. | .. | .. | 3 14 0 |

முந்திரிச் சாராயத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் டியூட்டி 35 டிக்ரி குறைந்த காரமுள்ள காலன் ஒன்றுக்கு ரூ. 3-0-0.

விசாகப்பட்டணம் ஜில்லா, சிகாகோல் சர்க்கிளில் விற்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இப்பா சாராயத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் டியூட்டி 60 டிக்ரி குறைந்த காரமுள்ள காலன் ஒன்றுக்கு அணா 3.

6. கான்ட்ராக்ட் ஸப்ளையருடைய டிஸ்டில்லரி வேர் அவுஸிலிருந்து வாங்கப்படும் சாராயத்தின் தீர்வை கவர்ன்மெண்ட் கஜானாவில் முன்னதாகவே செலுத்தவேண்டியது. ஆனால், கன்ட்ராக்ட் சப்ளைக்காரர் முன்னதாகவே டிரஷரியில் அட்வான்ஸ் பணம்கட்டியிருந்தால் அந்தக் கணக்கு தொகை கழியும்வரையில் தீர்வை அவரிடத்திலேயே கட்டிப்போடலாம். வாங்கப்படும் சாராயத்தின் கிரயத்தை கான்ட்ராக்ட் சப்ளையரிடத்திலேயே கட்டவேண்டும்.

7. மொத்த விற்பனை டெப்போக்காரர்களிடத்தில் சாராயம் கொள்ளப்பட்டால் எக்ஸைஸ் தீர்வையை கொள்கிரயத்துடன் மொத்த விற்பனைக்காரரிடத்தில் செலுத்திவிடவேண்டியது.

**சாராயம் மொத்த விற்பனை பண்ணும் டெப்போ லைஸென்ஸுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.**

1. டெப்போவிலுள்ள ஒவ்வொரு பீப்பாயின் அல்லது உலோக பாத்திரத்தின் பரிமாணத்தையும், அதன்மேல் தெளிவாய் செதுக்கி அல்லது சூட்டுக்கோலால் குறித்து அல்லது வர்ணத்தால் எழுதி வைக்கவேண்டியது. அந்த மார்க்குகள் சரியானவையென்பதற்கு லைஸென்ஸ்தாரன் ஜவாப்தாரியாவான். எண்பது அல்லது அதற்கதிகமான காலன்கள் கொள்ளும் பீப்பாய்களில் அல்லது பாத்திரங்களில் அடுத்த அரை காலன் வரைக்கும் கணக்குப்போட்டு மார்க்குப் போடவேண்டியது. எண்பதுக்குக் குறைந்த காலன்கள் கொள்ளும் பீப்பாய்களில் அல்லது பாத்திரங்களில் அடுத்த கால் காலன் வரைக்கும் கணக்குப்போட்டு மார்க்குப் போடவேண்டியது.

2. பின்வரும் விஷயத்தில் டிஸ்டில்லெரிகளிலிருந்தும் வேர்அவுஸ்களிலிருந்தும் டெப்போக்களில் கொண்டுவரப்பட்ட சாராய பீப்பாய்களையும் பாத்திரங்களையும், (a) விஷயத்தில் மற்ற டெப்போக்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சாராய பீப்பாய்களையும் பாத்திரங்களையும் அதிகாரம் பெற்ற ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் அளந்து சரி பார்ப்பதற்கு முன் திறக்கக்கூடாது.

(a) ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு சுதேச ராஜ்யத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னிய தேசத்து பிரதேசத்தின் மூலமாயாகிலும் போகும் சாராயங்கள் விஷயங்களில்.

(b) நெல்லிக்குப்பம் டிஸ்டில்லெரியிலிருந்து தென் ஆற்காடு ஜில்லாவின் தாழ்ந்த தீர்வை டிராக்டுகளுக்குப் போகும் சாராயங்கள் விஷயங்களில்.

(c) பெஜவாடா வேர் அவுஸிலிருந்து கிருஷ்ணா ஜில்லாவில் முனகாலா, லிங்ககிரி ஜமீன்களுக்குப் போகும் சாராய விஷயங்களில்.

(d) சாமல்கோட்டா டிஸ்டில்லெரியிலிருந்து கீழ் கோதாவரி ஏஜென்ஸியிலுள்ள டெப்போக்களுக்குப் போகும் சாராய விஷயங்களில்.

மற்ற விஷ்யங்களில் டெப்போ கீப்பர்கள் சாராய பீப்பாய்கள் அல்லது பாத்திரங்கள் வந்த உடன் சாராயத்தை சோதனை செய்யவேண்டியது. மேலும் வெகு ஜாக்கிரதையாய் அவர்களுடைய கணக்குகளில் சோதனையின் பலனை எழுதி வைக்கவேண்டியது. ஆனால் டெப்போ கீப்பர் இஷ்டப்பட்டால் விற்பனைக்காக பீப்பாய் அல்லது பாத்திரம் திறக்கப்படும்வரையில் அளந்து சரிபார்ப்பதை நிறுத்திவைக்கலாம். இந்த விஷயத்தில் டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸ் ராதாரிச் சீட்டில் கண்ட அளவு சாராயத்திற்கு டெப்போ கீப்பர்கள் ஜவாப்தாரியாவார்கள். ஒழுக்குடனாவது சந்தேகப்படத்தக்க ஸ்திதியிலாவது வருகிற எல்லாப் பீப்பாய்களும் பாத்திரங்களும் டெப்போவில் வந்தவுடன் அளந்து சரிபார்க்கப்படவேண்டியது.

3. சுதேச ராஜ்ஜியத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னிய தேசத்து பிரதேசத்தின் மூலமாயாகிலும் கொண்டுபோகப்படும் சாராயமானது அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களால் முத்திரை போடப்படாமல் கொண்டுபோகக்கூடாது.

4. ரெவினியு போர்டாரால் நியமிக்கப்படும் மாதிரியான ஹைட்ராமீட்டர் ஒவ்வொரு டெப்போவிலுமிருக்கவேண்டியது. ஒரு தெர்மாமீடரும், பங்ராடும், ஒரு முழு திராம் அளவும்கூட இருக்கவேண்டியது.

பங்ராடும், திராம் அளவு பாத்திரங்களும், வேண்டுமானால் ஹைட்ராமீடரும்கூட தெர்மாமீடரும் டிபார்ட்மெண்டாரால் விலைக்கு சப்ளை செய்யப்படும்.

5. ஒல்சேல் டெப்போ கீபர்கள் கான்ட்ராக்டு சப்ளையாரால் தன் கான்ட்ராக்ட் விஸ்தீர்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட டிஸ்டில்லெரி அல்லது வேர் அவுஸுகளிலிருந்து அல்லது அதே விஸ்தீர்ணத்தில் இதர ஒல்சேல் டெப்போக்களிலிருந்துதான் நாட்டுச் சாராய லைசென்ஸுகளுக்குரிய நிபந்தனைகளில் இரண்டாவது நிபந்தனையில் காட்டிய டேபிலில் இரண்டாவது காலம் பிரகாரம் சாராயம் சப்ளை பெற்றுக்கொள்ளலாம்.

6. ஒழுக்குடனாவது அல்லது சந்தேகிக்கப்படத்தக்க ஸ்திதியிலாவது வருகிற பீப்பாய்கள் அல்லது பாத்திரங்கள் தவிர இதர பீப்பாய்களும் பாத்திரங்களும் அவைகள் வந்த கிரமப்படி விற்பனைக்காக திறந்து வைக்கப்படவேண்டியது. அந்த ஜில்லாவிலுள்ள லைசென்ஸு பெற்றவர்களுக்கு மாத்திரம் சாராயம் விற்கவேண்டியது. ஆனால் குறைந்த சார்ஜ் உள்ள தாலூகாக்களில் சாராயம் மொத்த விற்பனை பண்ணும் டெப்போ லைசென்ஸ் பெற்றவர்கள் அதே ஜில்லாவில் உயர்ந்த சார்ஜ் உள்ள தாலூகாவிலிருக்கும் லைசென்ஸ் பெற்று விற்பவர்களுக்கு சாராயம் விற்கக்கூடாது.

7. ஒல்சேல் டெப்போ கீப்பர்கள் தங்களுடைய டெப்போ இருக்கும் ரேஞ்சை விட்டு இதர ரேஞ்சுகளிலிருக்கும் கடைகளுக்கு சாராயம் அனுப்பினால் அக்கடைகளிலிருக்கும் ரேஞ்சு சப்-இன்ஸ்பெக்டருக்கு அட்வைஸ் லெட்டர்களை இரண்டு வாரத்திற்கு ஒரு முறை அனுப்பவேண்டும். டெப்போ இருக்கும் ரேஞ்சிலேயேயுள்ள கடைகளுக்கு சாராயம் அனுப்பும்பொழுதெல்லாம், டெப்போ கீப்பர்கள், பர்மிட்டுகள் எழுதும்பொழுதே, அட்வைஸ் லெட்டர்களையும் எழுதி அவைகளை சப்-இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவாவதுவேண்டும் அல்லது அவர் அடுத்த தடவை பரிசோதனைக்குவரும்பொழுதாவது அவரிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

8. ஒல்சேல் டெப்போக்களுக்கு வரும் ஒவ்வொரு பீப்பாய்க்கும் அப்பீப்பாய் அளவுக்கு நூற்றுக்கு 2 விழுக்காடும், ஒவ்வொரு உலோக பாத்திரத்திற்கும் அப்பாத்திரத்தின் அளவுக்கு நூற்றுக்கு 1 விழுக்காடுமாக டெப்போ கீப்பர்களுக்கு சேதாரம் தள்ளிக் கொடுக்கப்படும். ஒவ்வொரு மாதத்தில் சாராய வரவுகளைப்பற்றி அடுத்த மாதம் 5 தேதிக்குள் பின் சொல்லப்பட்ட சங்கதிகளடங்கிய ஸ்டேட்மெண்டு ஒன்றை டெப்போ கீப்பர்கள் டெப்போ இருக்கும் ஸர்க்கிளின் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும்.

(i) டெப்போவுக்கு வந்த பீப்பாயின் அல்லது பாத்திரத்தின் நெம்பர் ; (ii) ஒவ்வொரு பீப்பாயிலும் அல்லது பாத்திரத்தில் அனுப்பப்பட்டதாய் சொல்லப்பட்ட சாராயத்தின் அளவு ; (iii) பீப்பாயினின்றும் அல்லது பாத்திரத்தினின்றும் உள்ளபடி அளந்தெடுக்கப்பட்ட சாராயத்தின் அளவு ; (iv) ஒவ்வொரு பீப்பாயிலும் அல்லது பாத்திரத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட சேதாரம்.

மேலே குறிப்பிடப்பட்ட அளவுக்குமேல் சேதாரமிருக்கும் ஒவ்வொரு பீப்பாய் அல்லது பாத்திரம் விஷயத்திலும், கலெக்டர்கள் தங்கள் யுக்தானுஸாரம் சேதார அளவின்மேல் செலுத்தவேண்டிய டியூட்டிக்கு இரண்டு மடங்கான தொகைக்கு மேற்படாத அபராதம் விதிப்பார்கள். பீப்பாய்கள் அல்லது பாத்திரங்கள் பலவித தீர்வையுள்ள பிரதேசசங்கள் வழியாய் வந்திருக்கும் பக்ஷத்தில் அந்த தீர்வைகளில் உயர்ந்த தீர்வை வீதம் அபராதம் விதிக்கப்படலாம். ஒரே சமயத்தில் விற்பனைக்காக ஒரு பீப்பாய் அல்லது பாத்திரம்தான் திறந்துவைக்கவேண்டியது. டெப்போவிலிருந்து வெளியேபோகும் சரக்குகள் எந்தெந்த பீப்பாய்களிலிருந்து அல்லது பாத்திரங்களிலிருந்து அனுப்பப்பட்டதென்பதை டெப்போ கீப்பர்கள் தங்கள் கணக்கு புஸ்தகங்களில் விபரமாய் காண்பிக்கவேண்டியது.

9. டெப்போ கீப்பர்கள் தங்களால் அனுப்பப்படும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை தங்களுடைய செலவில் ஸீல் செய்யவேண்டும். பர்மிட் நெம்பரும், சாராயம் அளிக்கப்பட்ட தேதியும் தெரியும்படியான சீட்டுகளை சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களில் ஒட்டவேண்டும். கலெக்டரவர்கள் டெப்போவிலிருந்து கடைக்கு போகிற சாராயத்தில் கொஞ்சம் புட்டிகளில் அடைத்து ஸீல் வைத்து கடைக்கு அனுபவேண்டுமென்று உத்திரவு செய்யலாம். டெப்போ கீப்பர்கள் ஒரு பிரைவேட் ஸீலை உபயோகிக்கவேண்டும். டெப்போவிலிருந்து அனுப்பப்படும் சாராய சரக்குகளடங்கிய ஜாடிகளிலும் இன்னும் இதர பாத்திரங்களிலும் மேற்கூறிய முத்திரையின் அடையாளம் போடுவதோடுகூட சரக்குகளோடு அனுப்பப்படும் பர்மிட்டிலும் அடையாளம் போடவேண்டும். பர்மிட்டுகளில் ஸீலின் அடையாளத்தை அச்சுமையினால் போடவேண்டும். அரக்கின்பேரில் போடக்கூடாது ; மேலும், எந்த மணியிலிருந்து எந்த மணி வரையில் அந்த பர்மிட்டு செல்லுமென்பதை பர்மிட்டின்மேல் காணவேண்டும். எந்த இன்ஸ்பெக்டர் இலாகாவில் டெப்போ இருக்கிறதோ அந்த இன்ஸ்பெக்டருக்கு வருஷத்தின் முதலில் டெப்போ கீப்பர்கள் ஸீலின் இரண்டு அடையாளங்களை அனுப்பவேண்டும். அந்த வருஷத்திற்குள் அந்த ஸீலை மாற்றக்கூடாது.

10. டெப்போ கீப்பர்களாவது அல்லது அவர்களுடைய நவுகர்களாவது சாராயக்கடைகளில் யாதொரு பாத்தியதையும் உடைத்தாயிருக்கக்கூடாது.

**சுவாதீன சாராயக்கடை லைசென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.**

1. சுதேச ராஜ்யத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னிய தேசத்து பிரதேசத்தின் மூலமாயாகிலும் கொண்டுவரப்படும் சாராயத்தை அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களால் பரிசோதனை செய்வதற்கு முன் திறக்கக்கூடாது.

2. சாராயக்கடைக்காரர்களாவது அவர்களுடைய நவுகர்களாவது சாராய மொத்த விற்பனை டெப்போக்களில் யாதொரு பாத்தியதையும் உடையதாயிருக்கக்கூடாது.

**டாவரன் லைசென்ஸுகளுக்கு சம்பந்தமான நிபந்தனைகள்.**

1. லைசென்ஸுதாரன் ஸ்பிரிட்டுகளை அழுக்கெடுப்பதினாலாவது வர்ணம் கொடுப்பதினாலாவது அல்லது வாசனை கொடுப்பதினாலாவது அல்லது வேறெந்த வஸ்துவை சேர்ப்பதினாலாவது சுத்திபண்ணகூடாது.

2. இந்த தேசத்தில் வாசனை கொடுக்கப்பட்டதும் வர்ணம் கொடுக்கப்பட்டதும் அல்லது கலப்பு செய்யப்பட்டதுமான, டாவரன்களில் கொண்டுவரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான ஸ்பிரிட்டுகளடங்கிய ஒவ்வொரு பாத்திரமும் "இந்தியாவில் வாசனை கொடுக்கப்பட்ட அல்லது வர்ணம் கொடுக்கப்பட்ட அல்லது கலப்பு செய்யப்பட்ட ஸ்பிரிட்டுகள்" என்கிற வார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது ; அல்லது சூட்டுக்கோலால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது. மொத்தமாய் இறக்குமதி செய்யப்பட்டு இராஜதானியில் புட்டிகளில் அடைக்கப்பட்டு டாவரன்களில் கொண்டுவரப்பட்ட அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்ட எல்லா மதுவடங்கிய புட்டிகளின் பேரில் எவ்விதமான மதுவென்றும் உண்டுபண்ணப்பட்ட தேசமும் தன்னுடைய லைசென்ஸில் கண்டிருக்கிறபடி புட்டியிலடைத்தவனுடைய பெயரும் புட்டியிலடக்கம் செய்த இடமும் தெளிவாய் காட்டுகிற ஒரு அச்சிட்ட லேபில் போடப்பட்டிருக்கவேண்டியது. இப்படிப்பட்ட லேபில் ஒட்டிய புட்டியிலிருக்கும் மதுவை விலைக்கு வாங்கிய லைசென்ஸுதாரர்கள் அதன் குணத்தை எவ்விதத்திலும் மாற்றக்கூடாது. அந்த லேபிலிலிருக்கும் வார்த்தைகளை

மாற்றவுங்கூடாது. அப்படி செய்யும்பக்ஷத்தில் லைஸென்ஸ் ரத்து செய்யப்படும். புரூவரியிலிருந்து எந்த பாத்திரத்தில் பீர் கொண்டுவரப்பட்டதோ அதே பாத்திரத்திலிருந்துதான் பீர் விற்கப்படவேண்டும். ஸ்பெஷல் காரணங்களிருந்தால் தவிர வேறு பாத்திரம் அல்லது பாத்திரங்களுக்கு டி பீரை மாற்றக்கூடாது. அப்படி மாற்றும்படி நேரிட்டால் ஸ்பெஷல் காரணங்களைக் கடை கணக்கு புஸ்தகத்தில் பதிவு செய்து பிற்பாடுதான் மாற்றவேண்டும்.

3. மலையாளத்தில் உண்டுபண்ணப்பட்ட தென்னங்கள்ளுச் சாராயத்தை கொள்ள விரும்பும் லைஸென்ஸுதாரர்கள் அந்த சாராய சப்ளை கன்ட்ராக்டரிடத்தில் தாங்களே சொந்த ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டியது. கன்ட்ராக்டர் தன்னிடத்தில் கையிருப்பு இல்லாமலிருந்தாலொழிய தென்னங்கள்ளுச் சாராயத்தை கொடுப்பதற்கு தடை சொல்ல பாத்தியமில்லை. அந்த மது " மலையாளத்தில் உண்டுபண்ணப்பட்ட ஸ்பிரிட்டுகள் " என்று லேபில் போடப்பட்ட பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கவேண்டியது. புரூப் காலன் ஒன்றுக்கு ரூ. 17-8-0 வீதம் தீர்வை.

4. வெளிதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அல்லது இந்தியாவில் செய்யப்பட்ட " அன்னிய சேதத்து மதுக்களை " கீழே கண்டிருக்கிறபடி காரமுள்ள டிக்ரிக்கு குறைந்து விற்கக்கூடாது :—

(1) ஜின்னிற்கு 35° குறைந்த காரம்.

(2) கொழும்புச் சாராயம் (Colombo arrack) தென்னங்கள்ளுச் சாராயம் ரெவின்யு போர்டார் வர்களால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் இதர வித மதுக்கள் 30° குறைந்த காரம்.

(3) டினேச்சர்டு ஸ்பிரிட்டு தவிர மற்ற எல்லா விதமான ஸ்பிரிட்டுகளுக்கு இட்டாலியா தேசத்து சாராயம் உள்பட 25° குறைந்த காரம்.

5. இந்தியாவில் செய்யப்பட்ட " அன்னிய தேசத்து மதுவிற்கு " புரூப் காலன் ஒன்றுக்கு ரூ. 21-14-0 வீதம் தீர்வை.

6. லைஸென்ஸுதாரர்கள் தண்ணீர் கலக்கப்பட்ட (diluted) பீரை வைத்துக்கொள்வதிலிருந்தும் விற்பதிலிருந்தும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**பீர் ஷாப்பு இல்லாத இடத்தில் இருக்கும் டாவரன் லைஸென்ஸுகளுக்கும் பீர் ஷாப்பு லைஸென்ஸுகளுக்கும் சம்பந்தமான நிபந்தனைகள்.**

1. இராஜதானிக்குள்ளாக இந்தியன் பீர் விற்க லைஸென்ஸ் பெற்ற ஒவ்வொருவனுக்கும் மேற்படி பீரை உற்பத்தி செய்கிற ஒவ்வொருவனும் சரியான நாணய விலை கொடுத்ததின்பேரிலாவது அல்லது அந்தத் தொகைக்குச் சரியான ஜாமீன் கொடுத்ததின்பேரிலாவது நல்ல பீரை விற்பனை காலத்தில் செலாவணியாயிருக்கும் டியூடியையும் ஒவ்வொரு ஹாக்ஷெட்டுக்கு 40 ரூபாய்க்கு அதிகப்படாமல் விலையையும் வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டும்.

ஆனால் 1922-23-ம் வருஷத்தில் பங்களூர் புரூவரியிலிருந்து இந்தியன் பீர் வாங்கிய கடைகள் டி புரூவரியிலிருந்து சப்ளை பெற்றுக்கொள்ளலாம். மதராஸ் டவுனிலுள்ள அன்னிய மது டாவரன்கள் மதராஸ், அல்லது கெட்டி அல்லது பெங்களூர் புரூவரியிலிருந்து வேண்டிய பீரைப் பெற்றுக்கொள்ளலாம். மனுதாரர்களுக்கு தாங்கள் செய்துகொண்ட மனுக்களின் வரிசைக்கிரமமாய் தாமதமின்றி நல்ல பீரைவாங்கிக்கொள்ள பாத்தியமுண்டு. பீர் குணத்தின் ஆக்ஷேபனைகளுக்கு ரெவினியு போர்டார் தீர்மானஞ் செய்வார்கள். அதற்குமேல் அப்பீல் கிடையாது.

2 லைஸென்ஸுதாரன் கமிஷனருடைய முன் உத்தரவில்லாமல் இந்தியாவில் செய்யப்பட்ட பீரை பங்களூர் தவிர மற்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. அந்தப்பிரகாரம் இறக்குமதி செய்யாத டி பீரை விற்கக்கூடாது.

**பீர் ஷாப்பு இல்லாத இடத்தில் இருக்கும் டாவரன் லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.**

1. சுதந்திரமான லைஸென்ஸு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திலேயே சாப்பிடும்படியான அன்னிய தேச மதுவையும் இந்தியாவில் செய்யப்படும் அன்னியதேச மதுவையும் இந்தியாவில் செய்யப்படும் பீரையும் தென்னங்கள்ளுச் சாராயத்தையும் விற்பனைபண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரே தடவையில் ஒரு ரெப்யூடெட் க்வார்டுக்கு மேற்படாமல் வெளியிலேயே கொண்டுபோகிற மனிதனுக்கு விற்பனை பண்ணவும் சம்பந்தப்படுகிறது.

2. இந்து தேசத்தில் உற்பத்தி பண்ணப்பட்டதும் கடைகளில் கொண்டுவரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான, பீருள்ள ஒவ்வொரு பாத்திரமும் " இந்தியாவில் உற்பத்தி பண்ணப்பட்ட பீர் " என்கிற வார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது, அல்லது சூட்டுக்கோலால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது.

**பீர் ஷாப் உள்ள இடங்களிலிருக்கும் டாவரன் லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனை.**

சுதந்தரமானது லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்குமிடத்திலே சாப்பிடும்படியாய் பீரைத்தவிர மற்ற அன்னிய தேச மதுவையும் இந்தியாவில் செய்யப்பட்ட அன்னியதேச மதுவையும் தென்னங்கள்ளுச்சாராயத்தையும் விற்பனை பண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரே தடவையில் ஒரு ரெப்யூடெட் க்வார்ட்டுக்கு மேற்படாமல் வெளியிலேயே கொண்டுபோகிற மனிதனுக்கு மேலே சொன்ன மது அல்லது சாராயத்தை விற்பனை பண்ணவும் சம்பந்தப்படுகிறது.

**பீர் ஷாப்பு லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.**

1. சுதந்தரமானது லைஸென்ஸு கொடுக்கப்பட்டிருக்குமிடத்திலேயே சாப்பிடும்படியான இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பீரை விற்பனை பண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரே தடவையில் ஒரு ரெப்யூடெட் க்வார்டுக்கு மேற்படாமல் வெளியிலேயே கொண்டுபோகிற மனிதனுக்கு டி பீரை விற்பனை பண்ணவும் சம்பந்தப்படுகிறது.

2. இந்து தேசத்தில் உற்பத்தி பண்ணப்பட்டதும் கடைகளில் கொண்டுவரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான, பீருள்ள ஒவ்வொரு பாத்திரமும் " இந்தியாவில் உற்பத்திபண்ணப்பட்ட பீர் " என்கிற வார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது, அல்லது சூட்டுக்கோலால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது.

புரூவரியிலிருந்து எந்த பாத்திரத்தில் பீர் கொண்டுவரப்பட்டதோ அதே பாத்திரத்திலிருந்துதான் பீர் விற்கப்படவேண்டும். ஸ்பெஷல் காரணங்களிலிருந்தால் தவிர வேறு பாத்திரம் அல்லது பாத்திரங்களுக்கு டி பீரை மாற்றக்கூடாது. அப்படி மாற்றும்படி நேரிட்டால் ஸ்பெஷல் காரணங்களைக் கடைக் கணக்கு புஸ்தகத்தில் பதிவுசெய்து பிற்பாடுதான் மாற்றவேண்டும்.

3. லைஸென்ஸுதாரர்கள் தண்ணீர் கலக்கப்பட்ட (diluted) பீரை வைத்துக்கொள்வதிலிருந்தும் விற்பதிலிருந்தும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

## நீலகிரியிலிருக்கும் பீர் ஷாப்பு லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனை.

லைஸென்ஸுதாரன் கலெக்டரால் பிரசுரம் செய்யப்படும் புருவரியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பீர் வாங்கிக்கொள்ளவேண்டியது.

## கஞ்சா ஷாப்பு லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்

1. லைஸென்ஸுதாரன் கவர்ன்மெண்டாரால் 1936-ம் ௵ மார்ச்௴ 3௳ **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டின் II**-வது பிரிவில் 310 முதல் 312 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட 1936-ம் ௵ பிப்ரவரி௴ 1௳யுள்ள 2-ம் நெ. கமிஷனர் நோடிபிகேஷனில் அடங்கிய H.D. ரூல்களையும், அவைகளுக்கு சேர்க்கையாக அப்போதைக்கப்போது அவர்களால் பிரசுரம் செய்யப்படும்போது அல்லது ஸ்பெஷல் ரூல்களையும் அனுசரிக்கவேண்டியது.

2. (a) கொடுக்கப்பட்ட சுதந்தரமானது கஞ்சா பங்கி இன்னும் சணல் செடியிலிருந்து செய்யப்படும் லாகிரி வஸ்துக்களை விற்பனை பண்ணுவதற்கு மாத்திரமேயாகும்.

(b) கடைகளில் கஞ்சாவையாவது பங்கியையாவது பீடி, சிகரெட்டுகளாக செய்யவாவதும் அல்லது கஞ்சா பங்கியை புகை பிடிப்பதற்கு அல்லது மெல்லுவதற்கு புகையிலையோடு கலந்து எந்தவிதத்திலாவது வைத்துக்கொள்ளவாவதும் கூடாது.

3. லைஸென்ஸுதாரன் வேட்டபாளம் ஸ்டோர் அவுஸிலிருந்தாவது அல்லது கடையிருக்கும் அதே ஜில்லாவிலுள்ள இதர ஷாப்புகளிலிருந்தாவது அல்லது மதராஸ் டவுன் ஸர்க்கில் இன்ஸ்பெக்டரால் நடத்தப்படும், ஸர்க்கார் தாக்கல் செய்யப்பட்ட, கஞ்சா ஏலத்திலாவது தனக்கு வேண்டிய கஞ்சா, பங்கி ஸப்ளைகள் வரவழைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் ரெவினியு போர்டார் - எந்த காலத்திலேயாவது எந்த லைஸென்ஸுதாரனையாவது குறிப்பிட்ட ஏதாவது ஒரு இடத்திலிருந்தாவது அல்லது வேட்டபாளம் கவர்ன்மெண்ட் கஞ்சா ஸ்டாக்கிலிருந்தாவதுதான் ஸப்ளை வரவழைத்துக்கொள்ளவேண்டுமென்று உத்தரவு செய்யலாம். அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களிலுள்ள கடைக்காரர்கள் அஞ்சங்கொ டிப்டி தாசில்தார் ஆபீஸிலிருந்து தேவையான கஞ்சாவை வாங்கிக்கொள்ளவேண்டும்.

4. (a) இஜாரா கடைசி மாதமாகிற மார்ச்சு மாதத்தில் லைஸென்ஸுதாரர்கள் அந்த இஜாரா முடிவு வரையில் தங்களுக்கு யதார்த்தமாய் எவ்வளவு கஞ்சா தேவையாயிருக்குமோ அதற்குமேல் இண்டெண்டு செய்யக்கூடாது. மார்ச்சு மாதத்தில் ஸ்டோர் அவுஸ் ஆபீஸருக்கு அல்லது இதர கஞ்சா கடைகாரருக்கு லைஸென்ஸுதாரரால் அனுப்பப்படுகிற ஒவ்வொரு இண்டெண்டும் கடையானது இருக்கிற ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் துவாராவாக அனுப்பப்படவேண்டும். ஷை ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் ஷை இண்டெண்டில் குறிக்கப்பட்ட கஞ்சாவை பூராவாக ஒத்துக்கொள்ளாமல் தனக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி ஒரு பகுதி மாத்திரம் ஸப்ளை செய்யும்படி உத்தரவு செய்யலாம்.

(b) சப்ளை நிர்ணயிக்கப்பட்ட கடையின் லைஸென்ஸுதாரன் முந்திய இஜாராதாரனிடமிருந்து ஏதாவது மிகுந்த சரக்கைப் பெற்றுக்கொண்டால், அப்படிப்பட்ட மிகுந்த சரக்கை மே மாதத்திற்காக அந்தக் கடைக்கு நிர்ணயிக்கப்பட்ட சப்ளைக்குள் சேர்க்கவேண்டியது. அப்படிப்பட்ட மிகுந்த சரக்கை லைஸென்ஸுதாரன் மே மாதத்திய இண்டெண்டில் காண்பிக்கவேண்டியது; அந்த மாதத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட சப்ளையிலிருந்து அந்த மிகுந்த சரக்கைச் கழித்த அளவிற்குமேல் அந்த மாதத்திற்கு இண்டெண்ட் செய்யக்கூடாது.

5. வேட்டபாளம் ஸ்டோர் அவுஸிலிருக்கும் ஸ்டாக்கு சொந்தக்காரர்கள் கையில் ஸ்டாக்கு இருக்கும் வரையில் அவர்களுடைய லைஸென்ஸு நிபந்தனையின் பிரகாரம், விற்பனைசெய்ய லைஸென்ஸு பெற்றவர்களுக்கு, எண்பது தோலாகொண்ட சேர் 1-க்கு கஞ்சா ரூபாய் 2 வீதத்திற்கு மேற்படாமலும், எண்பது தோலா கொண்ட சேர் 1-க்கு பங்கி அணு 8 வீதத்திற்கு மேற்படாமலும் அல்லது பொதுவாயாகிலும் ஏதாவது குறிப்பிட்ட கேஸிலாகிலும் நிர்ணயிக்கப்பட்ட ரேட்டுக்கு மேற்படாமலும், சட்டப்படி வழங்கிவரும் செலாவணியில் வேண்டிய கஞ்சாவின் விலையைப் பெற்றுக்கொண்டு ஸப்ளை செய்ய கடமைபட்டிருக்கிறார்கள். ரூல்களை அனுசரித்து ஷாப்பு கீப்பர்களால் அனுப்பப்படும் இண்டெண்டுகளை பெற்றுக்கொண்ட கிரமப்பிரகாரமும் கூடிய சீக்கிரத்திலும் பூர்த்தி செய்ய ஸ்டாக்கு சொந்தக்காரர்கள் கடமைபட்டிருக்கிறார்கள். தாங்கள் எப்போதாவது ஊரைவிட்டு வெளியேபோனால் அப்போது தங்களுக்கு பதிலாய் காரியம் பார்க்க ஸ்டோர் அவுஸுகளில் ஏஜெண்டுகளை நியமிக்கவேண்டியது. அப்படி செய்யத்தவறினால் ஸ்டோர் அவுஸ் ஆபிஸரே அவர்கள் இல்லாத சமயத்தில் வரும் இண்டெண்டுகளை அவர்களுக்கு பதிலாய் பூர்த்தி செய்து கஞ்சா முதலிய மாதிரி வஸ்துக்களை அனுப்பலாம்.

6. வேட்டபாளம் ஸ்டோர் அவுஸில் ஸ்டாக்குக் கிடைக்குமானால் விற்பனை செய்ய லைஸென்ஸு பெற்றவர்களுக்கு ரெவின்யூ போர்டார் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு சர்க்கார் கஞ்சா, பங்கி விற்கப்படும். இந்த கஞ்சா அல்லது பங்கியை விருப்பமுள்ள லைஸென்ஸுதாரர்கள் லாகிரி வஸ்துக்களுடைய டூடியையும் விலையையும் அவர்களுடைய கடை இருக்கும் தாலூகாவிலுள்ள கஜானாவில் செலுத்தவேண்டும். டூடியையும் விலையையும் செலுத்தினதற்காக கொடுக்கப்பட்ட கஜானா ரசீதை ஸ்டோர் அவுஸ் ஆபீசருக்கு அனுப்பவேண்டும். அந்த உத்தியோகஸ்தர் ஸ்டோர் அவுஸிலுள்ள ஸ்டாக்குகளிலிருந்து லாகிரி வஸ்துக்களை சப்ளை செய்வார்.

7. கவர்ன்மெண்ட் ஸ்டோர் அவுஸிலிருந்து வரவழைக்கப்பட்ட லாகிரி சரக்கடங்கிய பெட்டிகளை அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகஸ்தரால் ரூபகாரம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுமுன் திறக்கக்கூடாது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்கு 200 ரூபாய் வரைக்கும் அபராதம் விதிக்கப்படும்.

8. கலெக்டரால் குறிக்கப்படுகிற அளவுக்கதிகமாக கஞ்சா, பங்கி இன்னும் சணல் செடியிலிருந்து செய்யப்படும் லாகிரி வஸ்துக்களை லைஸென்ஸுதாரன் வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரு லைஸென்ஸின்படி விற்கக்கூடியது இவ்வளவுக்கு மேற்படக்கூடாதென்று ஏலக்காலத்தில் ரெவின்யு போர்டாருடைய முன் உத்திரவின்பேரில் கலெக்டர் பிரசுரம் செய்து நிர்ணயித்துவிடலாம். இஜாரா நடுவில் எந்த காலத்திலாவது கடைக்கு அனுப்பப்பட்ட கஞ்சா மிதமிஞ்சி போவதாய் காணப்பட்டால் லைஸென்ஸுதாரன் தகுந்த காரணம் காண்பிக்காத வரையில் மேற்கொண்டு வேண்டிய கஞ்சாவின் அளவைக் குறைக்க ரெவின்யு போர்டுக்கு அதிகாரமுண்டு.

9. லைஸென்ஸுதாரர்கள் விற்பனைக்காக கடையில் வைத்திருக்கும் அச்சுப்போட்ட கஞ்சாவை தங்கள் கடைகளில் சாதாரணமாய் தினசரி விற்பனைக்கு வேண்டிய அளவுக்குமேல் உடைக்கக்கூடாது. கஞ்சா பங்கி இவைகளிலிருந்து இதர லாகிரி வஸ்துக்களை கடைகளில் உண்டுபண்ணலாம். இந்த நிபந்தனைகளின்படி இதர லைஸென்ஸுதாரர்களுக்கு விற்கலாம்.

10. லைஸென்ஸுதாரன் தன்னிடத்திலிருக்கும் கஞ்சா ஸ்டாக்கின் விதைகளையாவது அல்லது அதினுடைய வேறே எந்த பாகத்தையாவது அழிக்கக்கூடாது. அவன் கஞ்சாவிலிருந்து பிரித்து எடுத்திருக்கிற விதைகளையும் அழிக்கவேண்டுமென்று விரும்புகிற வேறு வஸ்துக்களையும் ஒரு பரிசோதக உத்தியோகஸ்தர் பார்வையிட்டு அழிப்பதற்கு ஜாக்கிரதையாய் காப்பாற்றிவைக்கவேண்டும்.

11. லைஸென்ஸு பெற்ற வேளாண்மைகாரனுக்காவது அல்லது லைஸென்ஸு பெற்ற ஸ்டாக்கு சொந்தக்காரனுக்காவது சில்லரைக் கடைகளில் ஒரு விதமான பாத்தியமுமிருக்கக்கூடாது.

12. கஞ்சா லைஸென்ஸை திருட்டுத்தனமாகிய விற்பனைகளுக்கு உதவி புரியும்படி உபயோகித்தாலாவது கஞ்சாவை திருட்டுத்தனமாய் தூரதேச விற்பனைக்குக் கொண்டுபோகிறவனுக்கு லைஸென்ஸுதாரன் தெரிந்து விற்பனை செய்தாலாவது, அல்லது இதைப் போன்ற குற்றம் யாதாயினும் லைஸென்ஸுதாரன் செய்திருக்கிறுன் என்று சந்தேகப்படும்படி கலெக்டரவர்களுக்கு காரணம் ஏற்பட்டாலாவது அவர் தன்னுடைய காரணங்களை தாக்கல் செய்துகொண்டு உடனே லைஸென்ஸை ரத்து செய்து அந்த சுதந்தரத்தை மறுயேலம் போடலாம்; அல்லது வேறே எந்த ஏற்பாடாவது செய்யலாம். அதிலுண்டாகிற சகல நஷ்டத்துக்கும் லைஸென்ஸுதாரன் பாத்தியப்படவேண்டும். இந்த நிபந்தனையின் பிரகாரம் லைஸென்ஸை ரத்து செய்துவிட்டால், குத்தகை கால முழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகை தொகையானது உடனே பாக்கியாய்விடும்.

13. ஒரு சேர் கஞ்சாவுக்கு டூடி ரூ. 27-8-0, பங்கிக்கு ரூ. 12-8-0.

**அபினி ஷாப்பு லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்.**

1. லைஸென்ஸுதாரன் அபினி ஆக்டை அனுசரித்து 1932-ம் வருஷம் நவம்பர் மீ 29உயுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டின்** 1-வது பிரிவின் 1856 முதல் 1858 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட 1932-ம் வருஷம் நவம்பர் மீ 18உயுள்ள கவர்ன்மெண்ட் நோட்டிபிகேஷன் நெ. 463-ல் அடங்கிய ரூல்களையும் அப்போதைக்கப்போது அவர்களால் பிரசுரம் செய்யப்படும்போது அல்லது ஸ்பெஷல் ரூல்களையும் அனுசரிக்கவேண்டியது.

2. கொடுக்கும் சுதந்திரம், கிரமமாய் அனுமதி பெற்ற கடைகளில் (a) சுத்த அபினி சில்லரை விற்பனைக்கும் (b) நிர்ணயிக்கப்பட்ட கடைகளில் அபினி கலந்த வஸ்து தயார் செய்து சில்லரை விற்பனைக்கும்.

3. தாசில்தார் கச்சேரியில் விற்கும் சுத்த அபினியின் முழு சேர், அரை சேர் கட்டிகளின் விலைகள் முறையே ரூ. 85-0-0, ரூ. 42-8-0.

4. (a) லைஸென்ஸுதாரன் தனக்கு வேண்டிய சுத்த அபினியை கலெக்டரால் குறிப்பிடப்பட்ட தாசில்தார் கச்சேரியில் அது விஷயமாக ஏற்படுத்தியிருக்கிற ரூல்களை அனுசரித்து அரை சேருக்கு அல்லது அரைச் சேர் அரைச் சேராகவே சேர்க்கும்படியான அளவுக்குக் குறையாமல் வாங்கிக்கொள்ளலாம். (குறிப்பு.—ஒரு தாசில்தார் கச்சேரியிலிருந்து கடைக்காரர்கள் $\frac{1}{2}$ சேர், 1 சேர், $1\frac{1}{2}$ சேர் என்று சுத்த அபினியை வாங்கலாமே தவிர $\frac{3}{4}$ சேர், $1\frac{1}{4}$ சேர், $1\frac{3}{4}$ சேரென்று வாங்கமுடியாது.) இதுவுமல்லாமல் கலெக்டருடைய பிரத்தியேகமான உத்திரவின்பேரில் ஒரே ஜில்லாவிலிருக்கிற இதர கடைகளிலிருந்தும் சுத்த அபினி வாங்கிக்கொள்ளலாம். மேற்சொல்லியபடி வாங்குகிற சுத்த அபினியைத் தவிர வேறுவிதமான அபினியை லைஸென்ஸுதாரன் விற்கவாவது பெற்றுக்கொள்ளவாவது ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ளவாவது கூடாது. இஜாரா கடைசி மாதமாகிற மார்ச் மாதத்தில் லைஸென்ஸுதாரர்கள் அந்த இஜாரா முடிவுவரையில் தங்களுக்கு யதார்த்தமாய் எவ்வளவு சுத்த அபினி தேவையாயிருக்குமோ அதற்குமேல் வரவழைக்கக்கூடாது. மார்ச்சு மாதத்தில் அனுப்பப்படுகிற ஒவ்வொரு இண்டெண்டையும், தாலூகா டிரெஷரி உத்தியோகஸ்தர் ஜாக்கிரதையாக பரிசோதித்து, ஷை இண்டெண்டில் குறிக்கப்பட்ட சுத்த அபினியை பூருவாக ஒத்துக்கொள்ளாமல் தனக்கு யுக்தமாக எவ்வளவு அபினி தேவையாயிருக்குமென்று தோன்றுகிறதோ அவ்வளவு மாத்திரம் கொடுக்க உத்தரவு செய்யலாம்.

(b) சப்ளை நிர்ணயிக்கப்பட்ட கடையின் லைஸென்ஸுதாரன் முந்திய இஜாரா லைஸென்ஸுதாரனிடமிருந்து இருபது தோலா அல்லது அதற்கு மேற்பட்ட அளவு மிகுந்த சரக்கை எடுத்துக்கொண்டால், அப்படிப்பட்ட மிகுந்த சரக்கை ஏப்ரல் மாதத்திற்கு அந்தக் கடைக்கு நிர்ணயிக்கப்பட்ட சப்ளைக்குள் சேர்க்கவேண்டியது. அப்படிப்பட்ட மிகுந்த சரக்கை லைஸென்ஸுதாரன் ஏப்ரல் மாதத்திய சுத்த அபினி இண்டெண்டில் காண்பிக்கவேண்டியது. அந்த மாதத்திற்காக ஏற்பட்டிருக்கும் சப்ளையில் தாலூகா டிரஷரி உத்தியோகஸ்தர் நிர்ணயிக்கும் அளவைத்தான் அந்த மாதத்திற்குப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. விசாகப்பட்டணம், கீழ் கோதாவரி ஏஜன்ஸிடிராக்டுகளில் தவிர இதர இடங்களில் ஒரு லைஸென்ஸுதாரன் ஒரே காலத்தில் ஒரு மனுஷனுக்கு 1 தோலாவுக்கு மேல்பட்ட சுத்த அபினி அல்லது ஒரு தோலா சுத்த அபினிக்குமேல் அடங்கிய அபினி கலந்த வஸ்துவை விற்கக்கூடாது. மேல் சொன்ன ஏஜென்ஸி டிராக்டுகளில் மாத்திரம் 2 தோலா, சுத்த அபினி அல்லது 2 தோலா சுத்த அபினிக்குமேல் அடங்கியில்லாத அபினி கலந்த வஸ்துவை விற்கலாம். அஞ்சங்கோ, தங்கசேரி கிராமங்களில் லைஸென்ஸுதாரன் ஒரே தடவையில் $\frac{1}{2}$ தோலா சுத்த அபினி அல்லது $\frac{1}{2}$ தோலா சுத்த அபினி அடங்கிய எந்த அளவு அபினி கலந்த வஸ்துவும் விற்கலாம். லைஸென்ஸுதாரர்கள் விற்பனைக்காக கடையில் வைத்திருக்கும் அச்சுபோட்ட சுத்த அபினி கட்டிகளை தங்கள் கடைகளில் சாதாரணமாய் தினசரி விற்பனைக்கு வேண்டிய அளவுக்கு மேல் உடைக்கக்கூடாது.

6. கலெக்டரால் குறிக்கப்படுகிற அளவுக்குமேல் சுத்த அபினி, அல்லது அபினி கலந்த வஸ்துவை லைஸென்ஸுதாரன் ஏககாலத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரு லைஸென்ஸின்படி விற்கக்கூடியது இவ்வளவுக்கு மேற்படக்கூடாதென்று ஏல காலத்தில் ரெவின்யு போர்டாருடைய முன் உத்தரவின்பேரில் கலெக்டர் பிரசுரம் செய்து நிர்ணயித்துவிடலாம். இஜாரா நடுவில் எந்த காலத்திலாவது கடைக்கு அனுப்பப்பட்ட சுத்த அபினி மிதமிஞ்சிப் போவதாய் காணப்பட்டால் லைஸென்ஸுதாரன் தகுந்த காரணம் காண்பிக்காத வரையில் மேற்கொண்டு வேண்டிய சுத்த அபினியின் அளவை குறைக்க ரெவின்யு போர்டார் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

7. இந்த லைஸென்ஸை திருட்டுத்தனமாய் விற்பனைகளுக்கு உதவிபுரியும்படி உபயோகித்தாலாவது அபினியை திருட்டுத்தனமாய் தூரதேச விற்பனைக்கு கொண்டுபோகிறவனுக்கு லைஸென்ஸுதாரன் தெரிந்து விற்பனை செய்தாலாவது, மேற்கூடிய இரண்டு குற்றங்களில் ஏதாவது ஒன்றில் லைஸென்ஸுதாரன் குற்றவாளியென்று கலெக்டர் அவர்கள் சந்தேகிக்க தகுந்த காரணங்கள் தோன்றினுலாவது, கலெக்டர் அவர்கள் மேற்கூறிய காரணங்களை தாக்கல்செய்து லைஸென்ஸை ரத்துபண்ணியாவது சுதந்தரத்தை மறுயேலம் போட்டாவது அல்லது வேறே ஏதாவது ஏற்பாடாவது செய்துவிடலாம். அதினுலுண்டாகிற சகல நஷ்டத்திற்கும் லைஸென்ஸுதாரன் உட்படவேண்டியது. இந்த நிபந்தனையின்கீழ் குத்தகைச் சீட்டு ரத்து செய்துவிடப்பட்டால் குத்தகை கால முழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகை தொகையானது உடனே பாக்கியாய்விடும்.

8. லைஸென்ஸ் கொடுக்கப்பட்ட இடங்களில் அபினி அல்லது அதிலிருந்து செய்யப்பட்ட எவ்வித ரூபமுள்ள வஸ்துக்களை புகை குடிக்கவாவது அல்லது புசிக்கவாவது கூடாது.

அனுபந்தம்.

——————ஜில்லா——————தாலூகா——————
விலிருக்கும் கடை நெ.———ஐ 193 .
விக்கிறயம் பெற்றவரு
193 இஜாராவிற்கு——————————
விக்கிரயம் பெற்றவனு
டைய
—————————— ஸ்தாவர சொத்துக்களின்
டைய ஜாமீன்தாரனுடைய
விபரத்தைக்காட்டும் நமூனா.

(1) பெயர்——————————

(2) தகப்பன் பெயர்——————————

(3) இருப்பிடம், மேல்விலாசம்——————————

(4) தொழில்——————————

(5) ஸ்தாவர சொத்துக்களின் விபரங்கள் :—

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜில்லா. (1) | தாலூகா. (2) | கிராமம் (வீடாயிருந்தால், தெருவின் பெயர்). (3) | ஸர்வே நெ. (வீடாயிருந்தால், வீட்டின் கதவிலக்கம்). (4) | விஸ்தீர்ணம். (5) | நஞ்சை அல்லது புஞ்சை. (6) | தீர்வை. (7) | தற்கால விலை (நிலமாயிருந் தால் ஏகருக்கு விலை). (8) | யார் பேரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது ; பட்டாதாரா யிருந்தால் பட்டா நெ. (9) |
| | | | | | | | | |

II. மேல் குறிப்பிட்ட சொத்தில் உனக்கு உள்ள சுதந்திரம் அல்லது பாத்தியம் எவ்வளவு, எத்தன்மையானது ?

III. அந்த சொத்தின்பேரில் ஏதாவது வில்லங்கங்கள் உண்டா ? அப்படியானால் ஒவ்வொரு வில்லங்கத்தினுடைய தன்மையும், தொகையும். உனக்கு வேறு கடன்கள் உண்டா ? அப்படியானால் எவ்வளவு.

IV. மேலே I-வது வகுப்பில் காண்பிக்கப்பட்ட சொத்தின்பேரில் வேறு ஏதாகிலும் தாவா உண்டா? அப்படியானால் அதன் தன்மையும் தொகையும் குறிப்பிடவும்.

————ல் வசிக்கும்————டைய குமாரனாகிய————என்னும் நான் மேலே சொல்லியிருக்கிற என்னுடைய சொத்தைப்பற்றிய விவரங்கள் பூர்த்தியென்றும் உண்மையென்றும் அந்த சொத்தின்பேரில் III-வது வகுப்பில் கண்டதைத் தவிர வேறு யாதொரு வில்லங்கங்கள் இல்லையென்று, மேல்கண்ட நமூனாவில் கண்ட எந்த சொத்தையும் தாலூகா தாசில்தாருக்கு
பந்தனை
எழுத்துமூலமாய் முன் அறிவிக்காமல் ————
இன்னும் பந்தனை
படுத்துவதில்லை யென்று உறுதிமொழி சொல்லுகிறேன்.

சாட்சி——————————

அட்ரஸ்——————————

இடம்——————————

தேதி——————————

கையெழுத்து——————————

குறிப்பு.—(1) மேலே II-வது வகுப்பில், சொத்தானது உறுதி சொல்லுபவனுக்கு தனக்கே சொந்தமானதா அல்லது குடும்பத்திற்கு பொதுவானதா என்று சொல்லப்படவேண்டியது. பொது குடும்பமாயிருந்தால் உறுதி சொல்லுபவரின் பங்கும் அதன் கிரயமும் குறிக்கப்படவேண்டும்.

(2) IV-வது வகுப்பில், சொத்தின்பேரில் இரண்டாவது வகுப்பில் குறித்ததைத் தவிர இதர பாத்தியம் அல்லது ஸ்திரீதனம் முதலியவைபோன்ற தாவா குறிக்கப்படவேண்டும்.

(3) இந்த நமூனாவில் சொல்லப்பட்ட விஷயங்களை விளக்கும் பொருட்டு, உறுதி சொல்லுபவனை தாசில்தார் அவசியமாயிருந்தால் மேலும் நன்றாக கேள்விகளை கேட்டு விசாரித்து மறுமொழிகளை எழுதவேண்டியது. ஷை பதில்களை உறுதி சொல்லுபவனும் தாசில்தாரும் கையொப்பம் செய்து இந்த நமூனாவுடன் சேர்த்துவைக்கவேண்டியது.

ஷி. ராகவன்,
அஸிஸ்டெண்ட் ஸெக்ரெடரி,

போர்ட் ஆப் ரெவினியு, (ஸெப்ரேட் ரெவினியு),
மதராஸ், 1939-ம் ௵ ஜனவரி ௴ 22௳

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.